Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 324 | ஞாயிற்றுக்கிழமை 16 ஒக்ரோபர் 2022 | புரட்டாதி 29 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=

## கொத்து ரொட்டி விலை குறைப்பு

கொழும்பு, ஒக். 16

இன்று முதல் கொத்து ரொட்டியின் விலையை 50 ரூபாவால் குறைக்க நடவடிக்கை 14

## வெற்றிலைக்கடை போர்வையில் உயிர்கொல்லி போதைப்பாக்கு

### பாடசாலை அருகில் விற்றவர் கையும்மெய்யுமாக மாட்டினார்

யாழ்ப்பாணம், ஒக். 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானை சிவப்பிரகாசா வித்தியாலயத்துக்கு அண்மையில் நீண்ட நாள்களாக சூட்சுமமான முறையில் உயிர்கொல்லிப் போதைப் 15

உயிர்கொல்லி ஹெரோய்னுடன்

## கைதான சந்தேகநபர் பருத்தித்துறையில் தப்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

வடமராட்சிப் பகுதியில் வீடுடைத்து திருட்டு மற்றும் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வந்த கும்பலைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தில் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட 15

## பாண் விலை குறையாது

கொழும்பு, ஒக். 16

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் கோதுமைமாவின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் பாண் 14

# உயிர்கொல்லி போதைமாத்திரை விற்பனை: பிரதான சூத்திரதாரி உட்பட 4பேர் கைது

- போதனா மருத்துவமனை முன்பாக புடைவைக் கடையில் வியாபாரம்
- கொழும்பிலிருந்து 'பார்சலில்' கொண்டு வரப்படுவதாக விசாரணையில் தகவல்
- மன்னாரிலிருந்து கொண்டு வரப்பட்டதாக பொலிஸார் சந்தேகம்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16

பாடசாலை மாணவர்கள், இளைஞர்களை இலக்கு வைத்து பல நாள்களாக உயிர்கொல்லிப் போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த பிரதான முகவர் உட்பட 4 பேர் பொலிஸாரால் நேற்று அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான சந்தேகநபர்களிடமிருந்து ஆயிரம் போதை மாத்திரைகள், 210 மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் என்பன மீட்கப்பட்டுள்ளன. 15

## பளையில் விபத்து 47 பேர் காயம்

கிளிநொச்சி, ஒக். 16

மிதிவெடி அகற்றும் நிறுவனப் பணியாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்தும், டிப்பரும் மோதியதில் பேருந்து 14

## ரயில் விபத்து ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று இரவு 7.30 மணிக்குப் புறப்பட்ட தபால் ரயில் 14

மோ.சைக்கிளின்

## பெற்றோல் தாங்கியிலிருந்து தவறிவிழுந்த குழந்தை சாவு!

மன்னார், ஒக். 16

தந்தையுடன் மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியிலிருந்து பயணித்த இரண்டரை வயதுக் 14

## மாநகரசபை உறுப்பினர்களின் கொடுப்பனவை வழங்குங்கள்

### உள்ளூராட்சி ஆணையாளர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

மாதாந்தக் கூட்டத்தில் வெளிநடப்புச் செய்தமையால் யாழ். மாநகர சபை உறுப்பினர்களின் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படாமல் உள்ள நிலையில் அதனை 14

தமிழர் தாயகத்தில்

## முதலில் இயல்புநிலை; பின்னரே நல்லிணக்கம்

### வேலன் சுவாமிகள் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஒக். 16

இவ்வளவு நாளும் போரில் தமிழரை வென்று விட்டோம் என வெற்றி விழா கொண்டாடிய நீங்கள் இன்று 04

## கொட்டித்தீர்க்கும் மழை மூன்று பேர் உயிரிழப்பு 55ஆயிரம் பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 16

நாட்டில் 11 மாவட்டங்களில் நிலவும் கடும் மழையுடன் கூடிய வானிலையால் மூவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் 04

## வவுனியா விபத்தில் முதியவர் உயிரிழப்பு

வவுனியா, ஒக். 16

வவுனியா, மருத்துவமனை சுற்றுவட்டத்தில் இ.போ.சபை பேருந்தும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக் 14




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பட்டினிக் குறியீட்டில் இலங்கை 64ஆவது இடம்!

**கொழும்பு, ஒக். 16**

**இந்த வருடத்துக்கான உலகப் பட்டினிக் குறியீட்டில் இலங்கை 64ஆவது இடத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பட்டினியை எதிர்கொள்ளும் 121 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்விலேயே இலங்கைக்கு 64ஆவது இடம் கிடைத்துள்ளது.**

சர்வதேச அளவில் உணவுப் பற்றாக்குறை, ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து ஆண்டுதோறும் உலகப் பட்டினிக் குறியீடு வெளியிடப்பட்டு வருகிறது.

அயர்லாந்தைச் சேர்ந்த கன்சர்ன் வேர்ட் வைட் என்ற நிறுவனமும், ஜேர்மனியைச் சேர்ந்த வெல்ட் ஹங்கர் ஹில்பே என்ற நிறுவனமும் இந்தப் பட்டியலை வெளியிட்டு வருகின்றன. அந்த வகையில், நடப்பாண்டுக்கான உலகப் பட்டினிக் குறியீட்டுப் பட்டியல் நேற்று முன்தினம் வெளியானது. இதில் இலங்கை 64ஆவது இடத்திலும், இந்தியா 107ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 99ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 84ஆவது இடத்திலும், மியான்மர் 71ஆவது இடத்திலும், நேபாளம் 81ஆவது இடத்திலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

121 நாடுகள் அடங்கிய இந்தப் பட்டியலில் 107 ஆவது இடத்தை இந்தியா பிடித்திருக்கிறது. கடந்த ஆண்டில் 101 ஆவது இடத்தில் இந்தியா இருந்தது குறிப்பிடத்தக்கது.

**எப்படிக் கணக்கிடப்படுகிறது?**

ஒரு நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் போதுமான கலோரி உட்கொள்ளாமல் இருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை, நாட்டின் மக்கள் தொகையில் 5 வயதுக்குக் கீழ் இருக்கும் குழந்தைகளில் எத்தனை பேர் வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் இருக்கிறார்கள் என்ற கணக்கு, 5 வயதுக்குக் கீழ் இருக்கும் குழந்தைகளில் எத்தனை பேர் வயதுக்கேற்ற உடல் எடை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதற்கான கணக்கு என்பவற்றை மையப்படுத்தியே உலகப் பட்டினிக் குறியீடைக் கணக்கிடுகின்றனர். (ம)



## உக்ரைனின் 40 நகரங்களில் ரஷ்யா மூர்க்கத் தாக்குதல்!

கீவ், ஒக். 16

உக்ரைனின் 40 நகரங்கள் மீது ரஷ்யா மூர்க்கமான தாக்குதலை நேற்றுமுன்தினம் நடத்தியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு மேற்கொண்ட முன்னெடுப்புக்களை அடுத்து உக்ரைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை அறிவித்தது ரஷ்யா. கடந்த எட்டு மாதங்களாக இடம்பெற்றுவரும் இந்தப் போரில் டொனட்ஸ்க், லூகன்ஸ்க், ஸ்பெரெசியா, கெர்சன் ஆகிய 4 பிராந்தியங்கள் ரஷ்யாவால் முற்றுமுழுதாகக் கைப்பற்றப்பட்டன. இந்தப் பிராந்தியங்களில் அண்மையில் வாக்கெடுப்பை நடத்திய புடின், அந்தப் பகுதி மக்களின் ஆதரவுடன் மேற்படி நான்கு பிராந்தியங்களையும் ரஷ்யாவுடன் இணைத்தார்.

இதற்கு எதிராக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் கடந்த வியாழக்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, இந்த நில இணைப்பு சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்புக்கு எதிராகவே ரஷ்யா இந்தப் பலமுனைத் தாக்குதலை நடத்தியுள்ளது. உக்ரைனின் தலைநகர் கீவின் கணிசமான பகுதிகள் தாக்குதலில் முற்றாகச் சேதமடைந்துள்ளன என்றும் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம)

## பேருந்தை நிறுத்தமுன் இறங்கிய நபர் காயம்

சாவகச்சேரி, ஒக்.16

பேருந்தை நிறுத்த முன்னர், பேருந்திலிருந்து இறங்கிய நபரொருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. மானிப்பாயைச் சேர்ந்த 49 வயதான நபரே இவ்வாறு காயமடைந்தவராவார். காயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ம-14,9)

## தோட்டத்தொழிலாளருக்கு உரிமைகள் இல்லையா?

### வேலுகுமார் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஒக். 16

நாட்டில் ஏனைய தொழிலாளர்களுக்கு உள்ள தொழில் சட்ட உரிமைகள், தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்புடையதில்லையா? இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் சம்பளப் பிரச்சினை தொடர்ச்சியாக இழுபறி நிலையில் உள்ளது. சம்பள சபைகள் சட்டத்தின்படி நாளொன்றுக்கான கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். அதற்கு எந்தவித வேலை நிபந்தனையும் குறிப்பிடமுடியாது. ஆனால், தொடர்ச்சியாக தோட்டத் தொழிலாளர்களுக்கு அந்த நிலைமை புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறாயின் நாட்டின் ஏனைய தொழிலாளர்களுக்கு உள்ள தொழில் சட்ட உரிமைகள், தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்புடையதில்லையா? சட்டத்தை நடைமுறைப்படுத்தி, கண்காணித்து அதைக்கட்டுப்படுத்த வேண்டிய அரசாங்கமே அதைப் புறக்கணித்து செயற்படுகின்றது. இங்கு ஏனைய தொழிலாளருக்கு ஒரு சட்டமும் எமது தோட்டத் தொழிலாளருக்கு இன்னொரு சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அரச வர்த்தமானியின் படி நாளொன்றுக்கான சம்பளம் ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும். ஆனால், கம்பனிகள் நீதிமன்றம் கூறிய பிறகும் இந்தச் சட்டத்தை ஏற்பதாக இல்லை. இவை முற்றுமுழுதாக இலங்கையின் தொழிற்சட்டங்களை மீறும் செயற்பாடுகள் ஆகும். இது தொடர்பான தொழிலாளர்களின் எதிர்ப்புகள், முறைப்பாடுகள் நாளாந்தம் வெளிவந்துகொண்டு இருக்கின்றன. எனினும் தொழில் அமைச்சோ உரிய தொழில் அதிகாரிகளோ இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை. இந்த நிலைமை நாட்டில் புரையோடிப்போயிருக்கின்ற இன வேற்றுமையில் இன்னுமொரு அடையாளமாகவே தெரிகின்றது. இதிலிருந்து மீளெழுச்சி பெற மலையக சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு குரலெழுப்ப வேண்டும்- என்றார். (ம-14,இ)

## நீரில் மூழ்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஒக். 16

அம்பாறை- திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் முனைக்காடு பெரியகளப்பு ஆற்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நண்பர்களுடன் சென்று நீராடிக் கொண்டிருந்தபோது ஒருவர் காணாமற் போயிருந்த நிலையில், அவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர். தம்பிலுவில் முனை வீதியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி விஜயராஜ் (வயது-[illegible]) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,இ)

# 22ஆம் திருத்தத்துக்கு ஐ.ம.கூட்டணி ஆதரவு

### அடுத்த வருடம் தேர்தல் நடக்கும் மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 16

22ஆம் திருத்தத்துக்கு நிபந்தனைகளுடன் ஆதரவளிக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமைக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடாளுமன்றத்தை அடுத்த வருட முதல் காலாண்டில் கலைக்க இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரம் தரும், 'இரண்டரை வருடம்' என்ற விதி மாற்றப்படக் கூடாது. இந்த நாட்டு மக்கள் இன்று, இந்த நாடாளுமன்றத்தை மாற்றி, புதிய நாடாளுமன்றத்தை அமைக்க விரும்புகிறார்கள். ஆகவே, இரண்டரை வருடத்தில் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் தொடர்ந்து விடப்படுவதை நாம் தந்திரோபாய நோக்கில் ஆதரிக்கிறோம்.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் குறைந்த பட்சம் 113 உறுப்பினர்கள் கூடி நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்குச் செல்ல வேண்டும் எனத் தீர்மானித்தால், அதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுக்க முடியாது. அதை அவர் ஏற்று நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு செல்ல தீர்மானிக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம். ஆகவே அடுத்த வருடம் தேர்தல் மேகம் சூழும். புதிய மக்களாணையை பெறக் கட்சிகள் தயாராகவேண்டும். தேர்தலை சந்திக்க தமிழ் முற்போக்குக் கூட்டணி தயார் நிலையில் இருக்கிறது. அந்த நிலையை இன்னமும் மெருகூட்டும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்- என்றார். (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கனரக வாகனம் கவிழ்ந்ததில் ஒருவர் படுகாயம்



கொழும்பு, ஒக். 16

கனரக வாகனம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா தவசிகுளம் பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தவசிகுளம் பகுதியூடாக பயணித்துக்கொண்டிருந்த கனரக வாகனம் கட்டுப்பாட்டையிழந்த நிலையில் வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதிலேயே இந்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது. விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-18)


குடும்பமாக அமெரிக்காவில் குடியேற

**இதோ அரிய வாய்ப்பு!**

**அமெரிக்க லொத்தர் விசா**

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம்

பாஸ்போர்ட் அவசியமில்லை

075 330 5500

**உடனே பதிவு செய்யுங்கள்**

விரைவாகவும் - பாதுகாப்பாகவும் உங்கள் உறவுகளுக்கு பொதிகளை அனுப்ப

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

021 221 5656 – 076 122 1586 – 070 330 5500



# வேலை வாய்ப்பு

**உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை**



- வரவேற்பாளர்கள்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)
- கணினி பக்க வடிவமைப்பாளர்கள் (முழுநேரம் / பகுதி நேரம்)

**திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்**

சுயவிபரக்கோவையுடன் நாளை (17.10.2022) திங்கட்கிழமை முற்பகல் : 10.00 - மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை நேரில் வரவும்.

(CR 38100) (3/6)

**உதயன் பிரதான காரியாலயம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**




# ரயில் மோதியதில் 2 யானைகள் பலி!

முல்லைத்தீவு, ஒக். 16

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ரயிலுடன் மோதுண்டு இரண்டு யானைகள் உயிரிழந்தன. நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடனே யானைகள் மோதி விபத்துக்குள்ளாகின. சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மற்றும் வன உயிரிகள் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-113,213)

# ஓமந்தைப் பகுதியில் யானைகளால் அச்சம்

## அந்தப்பகுதி மக்கள் விசனம்

கொழும்பு, ஒக். 16

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டப் பகுதியில் யானைகள் புகுந்து பயிர்களை நாசம் செய்வதுடன் அங்குள்ள பற்றைக் காடுகளுக்குள் மறைந்து தாக்கவரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஓமந்தைப் பகுதியில் நாளுக்குநாள் யானைகளின் அச்சம் அதிகரித்து வருகின்றது. மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்கு நடமாட அச்சப்படும் அளவுக்கு நிலைமை கைமீறியிருக்கின்றது. ஓமந்தை 11 ஆம், 10 ஆம் ஒழுங்கைப் பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு யானையொன்று புகுந்து தென்னை, மரவள்ளி போன்ற பயிர்களை நாசம் செய்தது. இதன்போது வெடிகொளுத்தி யானைகளை துரத்த முற்பட்டால் அரச ஊழியர்களின் வீட்டுத்திட்ட பகுதிக் காணிகளில் சென்று மறைந்திருக்கிறது. எனவே இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ச-402)



# ஊர்காவற்றுறையில் கைக்குண்டு மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 16

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் பகுதியில் நேற்று மாலை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை மண்கும்பான் 4 ஆம் வட்டாரப் பகுதியில் காணியொன்றினை உரிமையாளர் துப்புரவுக்குட்படுத்திய நிலையில் சந்தேகத்துக்கு இடமான பொருளொன்றை அவதானித்துள்ளார். இதனையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு உரிமையாளரால் தகவல் வழங்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கைக்குண்டை மீட்டு செயலிழக்கச் செய்தனர். (ம-125)

# கசிப்பு விற்றாரென நபரொருவர் கைது

## அராலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 16

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலிப் பகுதியில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 500 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கசிப்பு விற்பனையில் குறித்த நபர் ஈடுபடுகிறார் என மதுவரித் திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து மதுவரி திணைக்களத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்தி விசாரணையை மேற்கொள்ள மதுவரித்திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27)




# அரசியல் தீர்வை நோக்கிய 75ஆவது நாள் கவனவீர்ப்பு

மன்னார், ஒக். 16

வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்றிட்டத்தின் 75 ஆவது நாள் கவனவீர்ப்புப் போராட்டம் திருகோணமலை முள்ளிப்பொத்தானையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில், முள்ளிப்பொத்தானைப் பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-14,213)

# பண்பாட்டு பெருவிழா

கிளிநொச்சி, ஒக். 16

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் பண்பாட்டுப் பெருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பளையில் இடம்பெறவுள்ளது.

பிரதேச பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள விழாவில், கலைநிகழ்வுகள் மற்றும் பிரதேச கலைஞர்கள் மதிப்பளிப்பு போன்றன இடம்பெறவுள்ளன. அத்துடன் தமிழர்களின் பண்பாட்டைக் குறிக்கும் பவனியும் இடம்பெறவுள்ளது. (ம-14,159,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 04 . 1948



மறைவு 12 . 10 . 2022

## திருமதி பாக்கியராசா புனிதவதி

யாழ். பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஐந்து சந்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியராசா புனிதவதி அவர்கள் கடந்த (12.10.2022) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இம்மானுவேல்-லூர்துமலர் தம்பதிகளின் பாசமிகு மூத்த புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா பாக்கியராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற எட்வர்ட்குலசிங்கம் மற்றும் புஷ்பவதி, யோகானந்தராணி, புஷ்பராணி, மெர்லின்சிராணி (தேவி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சாந்தகுமார் (லண்டன்), காலஞ்சென்றவர்களான ரவீந்திரகுமார், உதயகுமார் மற்றும் வசந்த குமார் (லண்டன்), ஜீவகுமார் (கனடா), இந்திரகுமார் (கண்ணன் - லண்டன்), சாந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தாமரை (லதா - திருகோணமலை), காயத்திரி (லண்டன்), ஜெஸ்ஸா (கனடா), பூங்குழலி (லண்டன்), அன்ரன் பெல்சியன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அரவிந்தன், ஜனனி, விதுரன், நயன், அக்ஷயா, அபிஷயா, அபினேஷ், ரிதினேஷ், மெர்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள இன்பம் மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாந்தன் - மகன் Mobile : +94778662846
வசந்தன் - மகன் Mobile : +447904511541
ஜீவா - மகன் Mobile : +14169935656
கண்ணன் - மகன் Mobile : +447545032907
பெல்சியன் - மருமகன் Mobile : +447725182605

தகவல்: குடும்பத்தினர்

(CS 47123) (3/6)

# மரண அறிவித்தல்



## திருமதி பாலசுப்பிரமணியம் கௌசலாதேவி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், முருங்கன் செட்டிகுளம் தற்போது ஆறுமுகநாவலர் வீதி பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் கௌசலாதேவி அவர்கள் கடந்த (13.10.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பார்த்தீபன், கம்சத்வனி, குமுதன்(ஊடகவியலாளர்), கபிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரதீபனின் அன்பு மாமியாரும், அகரனின் அன்புப் பேர்த்தியும், இந்திராதேவி, சந்திரஸ்ரீ, சுசீந்திரா ஆகியோரின் சிறிய தாயாரும், காலஞ்சென்றவர்களான தங்கராணி, தெய்வேந்திரன், மகேந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதியாபரணம், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், தனபாலசிங்கம், சண்முகராசா, ராசநாயகம், வேதாரணியம் மற்றும் மனோகரஞ்சிதம், லீலாவதி, தனராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், நவரட்ணம் கோசலாதேவியின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை ஆறுமுகநாவலர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் பூந்தோட்டம் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CR 38295) (3/6) தகவல்: மகன் - குமுதன் -07749 32029


## கொட்டித்தீர்க்கும்...

காயமடைந்துள்ளனர். அத்துடன் 55 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தின் வரக்காப்பொல - தும்பலியத்த மாயின்நொலுவப் பகுதியில் அதிக மழையுடனான வானிலையால் 2 மாடி வீட்டின் மேற்புறத்தில் காணப்பட்ட மண்மேடு எவரும் எதிர்பாராத விதமாக சரிந்து வீழ்ந்துள்ளது. சம்பவம் இடம்பெற்றபோது குடும்பத் தலைவரும் அவரது மனைவியும் அவர்களது மூத்த மகனும் வீட்டுக்குள் இருந்துள்ளனர். 10 வயதான இளைய மகன் வகுப்புக்காக சென்றுள்ளான்.

மண்மேடு சரிந்து வீழ்ந்தபோது, இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை அயலவர்கள் உடனடியாக தேட ஆரம்பித்துள்ளனர். தொடர்ச்சியாக தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன், அதன் பிரதிபலனாக வீட்டுக்கு முன்பாக காயங்களுடன் தந்தை உயிருடன் மீட்கப்பட்டார்.

தாயையும் மூத்த மகனையும் தேடும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக் கப்பட்டது. கடும் பிரயத்தனங்களுடன் முன்னெடுக்கப்பட்ட தேடுதல்களையடுத்து, மண்ணில் புதையுண்ட நிலையில் 48 வயதான தாய் கண்டுபிடிக்கப் பட்டார். அவர் உயிருடன் இருக்கவில்லை. இதன் பின்னர் பல மணி நேரங்களின் பின்னர் மகனின் சடலமும் கண்டுபிடிக்கப்பட்டது. வீட்டிலிருந்த செல்லப் பிராணியான நாய் இடிபாடுகளுக்குள்ளிருந்து வெளியே வந்துள்ளது.

வீட்டை அண்மித்து காணப்படும் பல வீடுகளுக்கும் சேதமேற்பட்டுள்ளதுடன், 15 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை - வகவத்த பகுதியில் நீர் நிறைந்த மாணிக்கக்கல் சுரங்கத்தில் தவறி வீழ்ந்து ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் பெய்த கன மழையால் சுரங்கத்தில் நீர் நிரம்பியதாகவும், உள்ளே இருந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்களை வெளியே எடுக்கும் பணியில் 5 பேர் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது, குறித்த நபர் சுரங்கத்தில் வீழ்ந்து காணாமற்போயுள்ளாரென பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனிடையே களுகங்கை, களனி கங்கை மற்றும் அத்தனகலு ஓயாவை அண்மித்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் குறிப்பிட்டது. கடும் மழை காரணமாக குக்குலே கங்கை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் சில பகுதிகள் நீரில் மூழ்கின. கிங் கங்கையை அண்மித்த தாழ் நிலங்களும் வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை- ஹாலிஎல - கிஹீகல் கொல்ல பகுதியிலுள்ள வீடொன்றின்மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

(தொடர்புடைய செய்தி உள்ளே)

## முதலில்...

தெற்கில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியாலேயே தமிழர்களைத் தேடி வந்துள்ளீர்கள். இந்தப் [illegible] முயற்சியை [illegible] நம்பவில்லை. எந்தவித நல்லிணக்க முயற்சிகளுக்கும் முன்பு, தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

-இவ்வாறு 'பொ-பெ' மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமான தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

'சுபீட்சமான நாட்டுக்கான பாதை நல்லிணக்கமே' எனும் தலைப்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் வாழ்வதற்கான அடிப்படை உரிமையைக்கூட பறிப்பதில் தீவிரமாக உள்ள சிங்களதேசம் எவ்வாறு சுபீட்சமான தேசத்துக்கான நல்லிணக்கப் பாதையைக் கண்டறிய முடியும். தமிழினத்தை சிங்கள மேலாதிக்கச் சிந்தனையில் அழித்துவிடத் துடிக்கும் போது எவ்வாறு எம்மால் கூடி வாழ முடியும்? இவ்வளவு நாளும் போரில் தமிழரை வென்று விட்டோம் என வெற்றி விழாக் கொண்டாடிய நீங்கள் இன்று தெற்கில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியாலேயே தமிழர்களைத் தேடி வந்துள்ளீர்கள். இந்தப் போலியான நல்லிணக்க முயற்சியை தமிழ் மக்களாகிய நாம் நம்பவில்லை. அதனை பதிவு செய்யவே இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளேன். இதுவே 70 வருடங்களுக்கும் மேலான எமது அரசியல் பட்டறிவில் நாம் கண்டு கொண்ட பாடம்.

எந்தவித நல்லிணக்க முயற்சிகளுக்கு முன்பு, தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். எமது தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள இராணுவம் அகற்றப்படவேண்டும். எமது [illegible]மயப்படுத்தும், சிங்கள [illegible]மாக்கல் நிறுத்தப்பட்டு காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகளாக சிறையில் வாடும் எமது உறவுகள் உடனடியாக எந்தவித நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்யப்படவேண்டும். சிங்கள தேசத்தின் நீதிப் பொறிமுறையில் நாம் முழுமையாக நம்பிக்கை இழந்துவிட்டோம். காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட எமது உறவுகளுக்காக சர்வதேச நீதியை நாடி நிற்கின்றோம். அதற்கு உதவாவிட்டாலும் இடையூறு செய்யாமல் இருங்கள்.

உண்மையாகவே சிங்கள தேசம் அமைதியை விரும்பினால், முதலில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்பதையும், தமிழர் ஒரு தேசிய இனம் என்பதையும் ஏற்றுக் கொள்ளுங்கள். இதன்வழி தமிழருக்கு தமது தலைவிதியை தீர்மானிக்கும் சுயநிர்ணயம் உள்ளது என்பதையும் ஏற்றுக்கொள்ளுங்கள். சர்வதேசத்தால் நடத்தி கண்காணிக்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பினூடாக வடக்கு - கிழக்கை பூர்வீகமாகக் கொண்ட எமது மக்களை தமது அரசியல் தலைவிதியை தீர்மானிக்க வழிவிடுங்கள். இதன் மூலமே இந்த இலங்கைத் தீவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த முடியும் - என்றார்.

நீதி நியாயமிக்க சமுதாயத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தலைமையில் சுபீட்சமான நாட்டுக்கான பாதை நல்லிணக்கமே எனும் தலைப்பில் யாழ். நகரிலுள்ள விடுதியில் கலந்துரையாடல் ஒன்று நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

(அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## துயர்க்கதையின் ஒரு சாட்சி...

**வ**டக்குக்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என்று சுட்டிக் காட்டியுள்ள இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், காணாமல் போனவர்கள் விவகாரத்தில் காத்திரமான பதில்களை இலங்கை அரசாங்கம் வழங்கவேண்டும் என்றும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற பல்வேறுபட்ட அமைதிப் பேச்சுக்களில் பங்கெடுத்தவர் என்ற ரீதியிலும், இலங்கையின் இனப்பிரச்சினையையும் அதன் தீவிரத்தன்மையையும் ஓரளவு புரிந்துவைத்துள்ளவர் என்ற ரீதியிலும் சொல்ஹெய்மின் கருத்துக்கள் மிகக் காத்திரமானவை. அத்துடன் அவை, இலங்கை அரசாங்கத்துக்கு வழக்கமாக வெளிப்படுத்தப்படும் 'சர்வதேச எதிர்ப்பு நிலைப்பாடு' என்ற வரையறைக்குள் பொத்தம்பொதுவாக வைத்துப் பார்த்துவிட முடியாதனவாகவும் அமைகின்றன.

இலங்கை அரசாங்கம் இன்று பொருளாதாரப் பேரழிவில் சிக்கியுள்ளமைக்கு, தமிழர்களின் அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படாமையே முதன்மைக் காரணம் என்பது வெள்ளிடைமலை. இதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்னும் இதர முக்கியமான புள்ளிகள் பகிரங்கமாகவே ஏற்றிருக்கின்றனர். சிறுபான்மை மக்களின் இனப்பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால், இந்த நாட்டுக்கு மீட்சி இல்லை என்பது இலங்கையில் உள்ள யாவரும் இந்தப் பொருளாதாரப் பேரிடரில் கற்றறிந்த பாடம். ஆயினும், தமிழர்களினதும் – இதர சிறுபான்மையினரதும் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான முன்னெடுப்புக்கள் ரணில் அரசாங்கத்தாலேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? என்றால், அதற்குரிய பதிலாக அமைவதென்னமோ 70 ஆண்டுகளாக புரையோடிப்போயுள்ள சகதியின் நீட்சியே.

காலிமுகத்திடல் போராட்டக்காலத்தில் இனத்துவேசங்களை வெளிப்படுத்துவதில் அரசியல்வாதிகள் அடங்கியே இருந்தனர். 'இது இனியும் எடுபடாது' என்றவொரு பொதுவான எண்ணவோட்டமும் நம்பிக்கையும் இந்தத் தீவை ஆழ நேசிப்பவர்களிடம் துளிர்க்கவே செய்தது. ஆனால், சர்வதேசக் கடனுதவிகள் மூலமும் பொலிஸ் அடக்குமுறைகளாலும் பொருளாதாரப் பதற்றம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் மெல்லமெல்ல ஆரம்பித்த இந்த இனத்துவேசம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுடன் மீண்டும் முருங்கையேறியிருக்கின்றது. விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர போன்ற இனவாதத் தூதர்கள் தமது அரசியல் இருப்புக்கானதும் வாக்கு வங்கிகளுக்கானதுமான செயற்றிட்டங்களை மீண்டும் கனகச்சிதமாக அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில், சொல்ஹெய்ம் வலியுறுத்தியுள்ள வடக்குக்கு அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை கொழும்பு எவ்வளவுதூரம் சிரத்தையில் ஏற்றப்போகின்றது என்பது கேள்விக்குறியே.

சர்வதேச அழுத்தங்களையும், கோரிக்கைகளையும், சமாதானத்தூதுவர்களின் நிலைப்பாடுகளையும் அவர்களின் கருத்துக்களையும் ஆழ்ந்து கவனித்துச் செயல்வடிவம் கொடுக்கின்ற பாங்கும் பக்குவமும் இந்த நாட்டின் இனத்துவேசிகளுக்கு இருந்திருந்தால், எதற்காக இந்த அழகிய தீவு குருதிச் சகதியில் தோய்ந்தெழ வேண்டும்? எதற்காக பொருளாதாரச் சீர்குலைவைச் சந்திக்க வேண்டும்? எதற்காக மீளமுடியாத கடன்பொறிக்குள் சிக்க வேண்டும்? இலங்கையின் நீண்ட – நெடிய துயர்க் கதையில் சொல்ஹெய்மும் ஒரு சாட்சி. அவ்வளவே...

நாளொரு நல்வார்த்தை

“ நகைச்சுவை உணர்ச்சி இல்லாதவர்களுக்கு வாழ்க்கை ஒரு பெருஞ்சுமை ஆகிவிடும்”

- ஜோர்ஜ் பெர்னாட்ஷோ




# அதிகாரப்பகிர்வு தொடர்பில் அரசு சிந்தித்தல் வேண்டும்

## எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்து

**கொழும்பு, ஒக். 16**



**வடமாகாணத்துக்கு அதிகாரப் பகிர்வு அவசியம். அது தொடர்பில் இலங்கை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அதேநேரம், காணாமல் போனவர்கள் தொடர்பான கேள்விகளுக்கும் இலங்கை அரசாங்கம் பதில்களை வழங்க வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.**

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்கள், சிங்களவர்கள் இரு தரப்பினரிடத்திலும் தீவிரவாதப் போக்குடையவர்கள் உள்ளனர். இவர்களில் தீவிரவாதப் போக்குடைய சிங்களவர்கள், நான் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கினேன் என்று தெரிவிக்கின்றனர். தீவிரவாதப்போக்குடைய தமிழர்கள், நான் புலிகளை அழித்தேன் அல்லது அழிக்கக் காரணமாக இருந்தேன் என்கின்றனர். இரண்டும் சரியான விடயமல்ல. நாங்கள் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பினோம். ஆனால் இன்று நான் இலங்கையின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்துகின்றேன். அதன் ஒரு பகுதியாக இருப்பது குறித்து நன்றியடைகின்றேன்.

உலகின் அழகான இடங்களில் இலங்கையும் ஒன்று. இலங்கை தனது எதிர்காலம் குறித்து சிந்திக்கவேண்டும். பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வது குறித்தும் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது குறித்தும் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக வடமாகாணத்துக்கு அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

அதேவேளை, தாய்மார், மனைவிமார், கணவன்மார், மகள்மார் உட்பட பலர் யுத்தத்தின் இறுதித் தருணங்களில் தங்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை அறிய ஆவலாக உள்ளனர். ஆகவே இலங்கை அரசாங்கம் காணாமல்போனவர்கள், உயிரிழந்தவர்கள் குறித்து மேலதிக தகவல்களை வழங்கவேண்டும். ஆயுதமோதலின்போது காணாமல்போதல், உயிரிழப்பு என்பவை சாத்தியமே. இலங்கை இது எவ்வாறு இடம்பெற்றது அல்லது இடம்பெற்றிருக்கலாம் என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

ஜனாதிபதி நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகளிற்கு தீர்வைக் காண்பது குறித்து உறுதியாகவுள்ளார் என்பதை நான் அறிவேன். அரசமைப்புச் சீர்திருத்தங்களையும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகளையும் ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வந்ததன் காரணமாகவே சர்வதேச சமூகம் உதவி வழங்க முன்வந்தது.

என்னால் இலங்கையின் பொருளாதார சூழல் சவால்கள் குறித்து பேச முடியும். எதிர்காலத்துக்கான சாத்தியப்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கமுடியும். ஆனால் ஜெனீவா வர்ணனையாளராக மாறுவதற்கு நான் முயலவில்லை. அது நான் செய்ய விரும்பாத ஒன்று - என்றார். (ம)

நாளை 17.10.2022 திங்கட்கிழமை புரட்டாதி - 30

சுபநேரம் : 12.02 - 01.32

ராகுகாலம்: 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோர் சிந்தனையை மழுங்கடிக்கவே வடக்கில் போதைப்பாவனை அதிகரிப்பு

## சிவாஜிலிங்கம் ஆதங்கம்



**யாழ்ப்பாணம், ஒக். 16**

**வடக்கில் உயிர்கொல்லி போதைப்பொருள்களின் பயன்பாடு இளையோர் மற்றும் மாணவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படுகிறது. எமது எதிர்கால சந்ததியினரின் எண்ணங்கள், சிந்தனைகளை திசைதிருப்பி மழுங்கடிக்கவே இந்த வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன - இவ்வாறு வடக்கில் அதிகரித்த உயிர்கொல்லி போதைப்பொருள் பயன்பாடு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் பல பாகங்களிலும் உயிர்கொல்லி போதைப் பொருள் பயன்பாடு உள்ள நிலையில் வடக்கில் அதிகமான விநியோக மார்க்கங்கள் மூலம் விநியோகம் இடம்பெறுவதுடன் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது.
உயிர்கொல்லி போதைப் பொருள் விநியோகம் இளைஞர்கள் மற்றும் மாணவர்களை இலக்குவைத்தே மேற்கொள்ளப்படுகிறது. இந்தச் செயற்பாடானது எமது எதிர்காலச் சந்ததியினரின் எண்ணங்கள் சிந்தனைகளை திசைதிருப்பி கருவறுக்கும் செயலாகும்.
இந்த வியாபார நடவடிக்கைகள் அரசாங்கத்தின் பல்வேறு அமைப்புகளாலேயே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நாங்கள் உறுதியாகவே கூறுவோம்.
இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அனைத்து தரப்பினருக்கும் உண்டு. எங்கள் செல்வங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.
ஒவ்வொரு கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
யாழ்ப்பாணம் அச்சுவேலியில் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலை உள்ளது. அதற்கருகில் காணிகளும் காணப்படுகின்றன. அங்கு மறுவாழ்வு நிலையம் ஒன்றை அமைத்து அதில் பாதிக்கப்பட்டவர்களை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.
தென்பகுதிக்கு பாதிக்கப்பட்டவர்களை கொண்டு செல்வதை தவிர்த்து அந்தந்த மாவட்டங்களிலேயே மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து அதற்கான சிகிச்சை முறைகளை பின்பற்றுவதே சிறந்த தீர்வாகும் - என்றார். (ச-20,26)

### வெடுக்குநாறி ஆலய வழக்கு

## ஆலய நிர்வாகத்தினர் தற்காலிக விடுதலை!

வவுனியா,ஒக்.16
வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழக்கிலிருந்து ஆலயத்தின் நிர்வாகத்தினரை தற்காலிகமாக விடுதலை செய்யுமாறும் சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளை ஆதாரத்துடன் முன்னிலைப்படுத்துமாறும் வவுனியா நீதிவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.
வவுனியா, நெடுங்கேணி - வெடுக்குநாறிமலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள தொல்பொருள் திணைக்களமும், நெடுங்கேணி பொலிஸாரும் தடைகள் விதித்து ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
இதுதொடர்பான வழக்கு விசாரணை வவுனியா நீதிவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போது குறித்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆலயத்தின் பூசகர் தம்பிராசா மதிமுகராசா மற்றும் நிர்வாகத்தினர்களான தமிழ்ச்செல்வன், சசி ஆகியோரை வழக்கிலிருந்து தற்காலிகமாக விடுதலை செய்ததுடன் உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதாரங்களுடன் கண்டறிந்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். (ச-110)

## உதைபந்தாட்டச் சுற்றில் சென்.பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 16
யாழ்.மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திய 14 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.
சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது.
குறிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் எதையும் பெறாத நிலையில் தண்ட உதைமூலம் இறுதிச்சுற்று நடத்தப்பட்டது. அதில் 4:3 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது. அத்துடன் தொடரின் சிறந்த உதைபந்தாட்ட வீரனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் அ.விக்மிலன் தெரிவு செய்யப்பட்டார். (ஒ-14)



### ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஒக். 16
நடராசா தங்கேஸ்வரி ஞாபகார்த்த கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்க சிறுவர் விளையாட்டு முற்றத்தின் 2 ஆவது ஆண்டு நிறைவு விழா, இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஞானபாஸ்கரோதய சிறுவர் விளையாட்டு முற்றத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின். க.சீலனின் "எலியார் எங்கே போனார்" என்ற சிறுவர் நாடகமும் கோமாளிகள் அரங்காற்றுகையும் இடம் பெறவுள்ளன. (ஒ-14)

### மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் கலைவிழா

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு மூளாய் பிரசாத் அரங்கில் இடம்பெறவுள்ளது.
மன்றத் தலைவர் பூ.யதுமயன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கலந்து கொள்ள வுள்ளார். (ஒ-14)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் செயற்பாட்டினால் நினைத்ததை சாதிப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமான நாள்.

**இடபம்:** திட்டமிட்டு செயற்படுவீர்கள். உங்கள் திறமை வெளிப்படும் நாள். கடவுள் வழிபாட்டில் மனம் செல்லும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**மிதுனம்:** பழைய பிரச்சினை ஒன்று பெரிதாக பேசப்படும். திட்டமிட்ட செயலின் தடையால் சங்கடம் ஏற்பட்டாலும் நன்மையில் முடியும். பயணத்தில் சங்கடம் தோன்றும்.

**கடகம்:** நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்பாராத வரவால் நிதிநிலை உயரும். வியாபாரத்தில் இருந்து வந்த நெருக்கடி விலகும். நிம்மதி காணும் நாள்.

**சிம்மம்:** தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். இலாபம் அதிகரிக்கத் தொடங்கும். மனநிறைவான நாள். கடன் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். புதிய முயற்சி ஒன்றில் கவனம் செலுத்துவீர்கள்.

**கன்னி:** குடும்ப நலனில் கவனம் செலுத்துவீர்கள். சொத்து வாங்கும் முயற்சியில் [illegible] மனதில் [illegible] பண வரவில் இருந்த தடைகள் விலகும்.

**துலாம்:** சந்திராஷ்டமம் தொடர்வதால் செயல்களில் கவனம் தேவை. குழப்பத்தை விளைவிக்கும் செயலை தள்ளிப்போடுவது நல்லது. பயணம் அலைச்சலைத்தரும்.

**விருச்சிகம்:** தம்பதிகளுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு நீங்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினருடன் பொழுதைக் கழிப்பீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும்.

**தனுசு:** நண்பர்கள் அவசரத்துக்கு உதவுவார்கள். உங்கள் செல்வாக்கு உயரும். வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அமைதி காணும் நாள்.

**மகரம்:** எண்ணம் நிறைவேறும். குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்வீர்கள். எதிர்பாராத இலாபம் உண்டாகும். குடும்பத்தில் ஒருவரின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.

**கும்பம்:** எதிர்பாராத பயணம் ஏற்படும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவி புரிவார்கள். தடைப்பட்ட ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அதனால் வேலை அதிகரிக்கும்.

**மீனம்:** துணிச்சலுடன் ஒரு செயலில் ஈடுபடுவீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். பணிபுரியும் இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். உறவினருடன் ஏற்பட்ட பகை விலகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகள் அவசியமற்றவை!

## தேசிய சபையில் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக். 16**

**இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்து வகைகளில் பெருந்தொகையானவை மக்களின் பாவனைக்கு அத்தியாவசியமற்றவை. இந்தக் கொள்முதல் நடைமுறையை ஒழுங்குபடுத்துவது மற்றும் உரிய ஒருங்கிணைப்பை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் இவ்வாறு நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசிய சபையின் உப குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.**

நாட்டுக்கு மருந்துகளை இறக்குமதி செய்வது மற்றும் விநியோகம் செய்வது தொடர்பான கொள்முதல் நடைமுறைக்கு அதிக காலம் செலவாகுகின்றமை மற்றும் முறையான ஒருங்கிணைப்பு இன்மை தொடர்பில் கூட்டத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.
ஒரு மருந்து பல வர்த்தக நாமங்களில் இறக்குமதி செய்யப்படுவதால் முறையான கட்டுப்பாடுகள் இல்லாமை பெரும் பிரச்சினையாகவுள்ளது என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.
இந்தக் கொள்முதல் நடைமுறையை ஒழுங்குபடுத்துவது மற்றும் உரிய ஒருங்கிணைப்பை மேற்கொள்வது தொடர்பில் துறைசார் நிபுணர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.
நோய்களைத் தடுப்பதற்கு சுதேச மருத்துவத்தில் நிரூபிக்கப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.
மேலும், நாட்டில் அதிகமான மருந்துகள் பயன்படுத்தப்படும் இருதய நோய், நீரிழிவு, உயர்குருதி அழுத்தம் மற்றும் கொலஸ்ட்ரோல் போன்ற நோய்களைக் குறைப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய உணவுகள் மற்றும் மாற்று சுதேச மருந்துகளை ஊக்கப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. (ச-இ)

# பொதுமக்கள் மீது புதிய வரி விதிக்கத் தீர்மானம்

## சஜித் வெளிப்படை



கொழும்பு, ஒக். 16 -
பெரும் இன்னல்களுக்கு மத்தியில் வாழ்க்கையை நகர்த்தும் பொதுமக்கள் மீது புதிய வரிச்சுமையை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெளிப்படையாகத் தெரிவித்தார்.
சஜித்தின் 'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 36ஆவது கட்டமாக மற்றுமொரு பேருந்து, காலி சித்தார்த்த தேசிய பாடசாலைக்கு சஜித் பிரேமதாஸவால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
மக்கள் மீது வரம்பற்ற அழுத்தத்தை ஏற்படுத்தும் விசித்திரமான வரியாக இது மாறியுள்ளது. அரச வருமானத்தை அதிகரிப்பதற்குள்ள ஒரே வழி வரி அதிகரிப்பு மாத்திரமல்ல. மாறாக பண்டோரா பத்திரங்கள் மூலம் பெயரிடப்பட்ட நபர்கள் வைத்திருக்கும் டொலர்களையும் நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் - என்றார். (ம-14)

# அமெரிக்க பயணிகளின் ஆவணங்களில் மோசடி

## அவதானமாக செயற்படுமாறு அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 16
அமெரிக்காவுக்குச் செல்வதற்கான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைப் பெறுவதில் மோசடிகள் இடம்பெறுகின்றன.
இதனால் அமெரிக்காவுக்குச் செல்லும் பயணிகளை அவதானமாகச் செயற்படுமாறு கொழும்பிலுள்ள அமரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் மேலும் தெரிவித்ததாவது,
மோசடி செய்பவர்களால் விளம்பரப்படுத்தப்படும் பயணக் காப்பீட்டுச் சான்றிதழ்கள் அமெரிக்காவுக்குப் பயணிக்கத் தேவையற்றவை. பயணிகள் இந்த மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நுழைவிசைவுக் கட்டணங்கள் உத்தியோகபூர்வ வங்கிகள் அல்லது அமெரிக்கத் தூதரகத்தின், தூதரக காசாளருக்கு மட்டுமே செலுத்தப்பட வேண்டும். மேலும் விசா தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இணையத்தள முகவரியொன்றும் தரப்பட்டுள்ளது.
இதேவேளை- பொதுவாக கிரீன் கார்ட் என அறியப்படும் அமெரிக்க பன்முகத்தன்மை விசா திட்டம் விண்ணப்பத்துக்காக திறக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (ம-14-இ)

# வளிமண்டலவியல் திணைக்களத்தால் அரசாங்கத்துக்கு ரூ.40 கோடி இழப்பு

## கணக்காய்வு அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஒக். 16
2021ஆம் ஆண்டில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் 40 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கணக்காய்வு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் உள்ளதாவது:
வளிமண்டலவியல் திணைக்களம் 2010ஆம் ஆண்டு முதல் கொக்கல ரேடர் அமைப்பை அமைப்பதற்காக 40 கோடி ரூபா செலவிட்டுள்ளது. எனினும், இதுவரை ரேடர் அமைப்பு கட்டப்படவில்லை. இந்த ரேடர் அமைப்பை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 91 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் காணாமல் போயுள்ளன.
இந்தப் பொருள்கள் இடம் மாறியது குறித்தும், தோல்வியடைந்த திட்டத்துக்கு காரணமான அதிகாரிகள் குறித்தும் அரசுக்கு ஏற்படும் இழப்பு குறித்தும் முறையான தணிக்கை செய்ய வேண்டும். அதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்புரையின் பேரில் தற்போதுள்ள பொருள்கள் மற்றும் கோபுரத்துடன் கூடிய கட்டடம் தற்காலிக பாவனைக்காக இராணுவ அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ச-இ)

# போலி ஆவணங்களில் வாகனங்கள் விற்பனை

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 16
போலி ஆவணங்களைத் தயாரித்து செஸி இலக்கங்களை மாற்றி அதி சொகுசு வாகனங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
70 லட்சம் ரூபா பெறுமதியான சொகுசு வாகனமொன்று 25 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று பாணந்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளில் இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.
பெரியளவிலான வாகனங்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர் ஒருவர் இந்த மோசடியின் பின்னணியில் உள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதற்கமைய இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
எனவே, சொகுசுவாகனங்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டால் அதுதொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமெனவும், இவ்வாறான வாகனங்கள் பற்றிய தகவல்கள் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டும் எனவும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14-இ)

# அனைத்து விளைநிலங்களிலும் பயிர்ச்செய்கை

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து!



கொழும்பு, ஒக். 16
நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு அனைத்து விளை நிலங்களிலும் பயிர்ச்செய்கையை முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.
திருகோணமலை மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
விவசாயிகளின் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க வேண்டும். அத்துடன் எதிர்வரும் போகத்தை சிறந்த முறையில் முன்னெடுப்பதன் மூலம் 2023ஆம் ஆண்டில் ஏற்படக்கூடிய உணவு நெருக்கடியைச் சமாளிக்கத் தயாராக வேண்டியது மிக அவசியமாகும் என்றும் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார்.
பாரம்பரியமாக விவசாயம் செய்யப்பட்டு வந்த அநேகமான விளைநிலங்கள் போரால் கைவிடப்பட்டு, பின்னர் வன உயிரிகள் மற்றும் வனவள பிரதேசமாக எல்லையிடப்பட்டுள்ளன. அவ்வாறான பாரம்பரிய காணிகளை மீள விவசாயிகளுக்கு வழங்குவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. (ம-14-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளுக்கு
# போதைமாத்திரை வழங்கி பெண்கள் இருவர் யாசகம்

கொழும்பு, ஒக். 16
பிள்ளைகளுக்குப் போதைமாத்திரை வழங்கிய யாசகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் பொரளை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
இரண்டு சிறிய பிள்ளைகளுக்கு போதைமாத்திரை வழங்கிப் பிள்ளைகளை நித்திரையடையச் செய்த பின்னர் அந்தப் பிள்ளைகளைப் பயன்படுத்தி பெண்கள் யாசகம் மேற்கொண்டுள்ளனர்.
பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும் பிள்ளைகளுக்கு சிகிச்சையளிக்க பெரிய தொகைப் பணம் தேவைப்படுவதாகவும் கூறி பெண்கள் இருவரும் மக்களிடம் யாசகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஒ-14.இ)

## கிழவன்காடு கலாமன்றத்தின் பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும்

யாழ்ப்பாணம், ஒக். 16
காரைநகர் - கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
கிழவன்காடு கலாமன்ற ஸ்தாபகரும் தலைவருமான ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சண்முகலிங்கன் கௌரி தம்பதியினர் கலந்துகொள்ளவுள்ளனர்.
அத்துடன் நிகழ்வுக்கு வருகை தருவோருக்கான இலவச போக்குவரத்து சேவை காரைநகர் கிளையிலிருந்து பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14)

## வரம்புமீறி நகையணிந்து வந்தால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஒக். 16
வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்தல் நோக்கத்துடன் வரம்புக்கு மீறி தங்க நகைகளை அணிந்து வருபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.
நாட்டுக்கு தங்கம் கடத்தப்படுவதால் மாதம் ஒன்றுக்கு சுமார் 30 மில்லியன் அமெரிக்க டொலர் வரி வருமான இழப்பு ஏற்படுகிறது.
இந்த கடத்தல்காரர்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## மஹிந்த தலைமையில்
# தேர்தலுக்குத் தயார்ப்படுத்தல் மொட்டுக்கட்சி கூட்டம் இன்று

**கொழும்பு, ஒக். 16**
**சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தலுக்கு தயார்ப் படுத்தப்படுத்தலுக்கான அடுத்த கூட்டம் நாவலப்பிட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.**
முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர் எனப் பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.
வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி அடுத்த தேர்தலுக்கு கட்சியைத் தயார்ப்படுத்தும் வகையில் இந்தக் கூட்டம் தொடர்ச்சியாக நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## பழைய மாணவர் சங்க மீளமைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 16
பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க மீளமைப்புக் கூட்டம், எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி இந்து இளைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் நூற்றாண்டு விழா மலர் வெளியீடு தொடர்பிலும் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## மோ.சைக்கிள் - கப்ரக வாகன விபத்தில் இருவர் படுகாயம்!

கிளிநொச்சி, ஒக். 16
மோட்டார் சைக்கிள் கப்ரக வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.
இந்த விபத்துச் சம்பவம் கிளிநொச்சி- விவேகானந்த நகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.
கிளிநொச்சியில் இருந்து விவேகானந்த நகர்ப் பகுதியை நோக்கிச் சென்ற மோ. சைக்கிளும் விவேகானந்த நகர்ப் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த கப்ரக வாகனமும் முந்திச் செல்ல முற்பட்ட வேளை விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஒ-14.113)



# வீரசிங்கம் மத்திய கல்லூரியிலும் போதைப்பொருள் விழிப்புணர்வு

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களின் பெற்றோருக்குப் போதைப்பொருள் விழிப்புணர்வு கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.
கல்லூரி அதிபர் லலிதா முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற விழிப்புணர்வில் வளவாளர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.தர்மேந்திரா, ஆசிரிய ஆலோசகர் செ.ஜெயானந்தன், போதைப்பொருள் தடுப்பு நிலைய வடமாகாண இணைப்பாளர் ஆ.கோஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-14.9)

## சுமந்திரன் கொலை முயற்சி: சந்தேகநபர்களுக்கு பிணை

கொழும்பு, ஒக்.16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை படுகொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 சந்தேகநபர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.
பிரமுகர் ஒருவரை கொலை செய்ய முயற்சித்தமை, சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த இவர்கள் அதன்பின்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.
இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தபோதே அவர்களுக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல், ரணித்தா ஞானராஜா, சுரங்க பண்டார, சுவாதிகா ரவிச்சந்திரன் ஆகியோர் மன்றில் தோன்றினர்.
சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் சந்தேக நபர்கள் நால்வர் சார்பான பிணை விண்ணப்பத்தை திறந்த மேல் நீதிமன்றில் முன்வைத்தார். அரச தரப்பு சட்டத்தரணி அரச தரப்பு வாதங்களை மன்றில் முன்வைத்தார்.
இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரட்ன சந்தேக நபர்கள் நால்வருக்கும் நிபந்தனையுடன் கூடிய பிணை அனுமதியை வழங்கினார். (எ-20)

# அதிகவட்டி தருவதாக ரூபா 70 கோடி மோசடி
## சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக். 16
கஹதுட்டுவ - பாலகம பிரதேசத்தில் மக்களிடம் அதிக வட்டி தருவதாகக் கூறி 70 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.
அதேபகுதியைச் சேர்ந்த 28 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைதானவராவார்.
கஹதுட்டுவ - பாலகம பகுதியில் குறித்த நபர் [illegible] கூறி பணமோசடியில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸாருக்குப் பலரிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின் கெஸ்பேவ நீதிமன்றில் [illegible] நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பாதுகாப்புத்திட்டம் ஆரம்பமானது அம்பாறையில்

கொழும்பு, ஒக். 16

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷணையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கிராமிய பொருளாதார கேந்திரத்தை வலுவூட்டம் செய்யும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் அம்பாறை மாவட்டத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டச் செயலர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டீ வீரசிங்க, முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான ஏ.எல்.எம். அதவுல்லாஹ், பைசால் காசிம், டீ.கலையரசன், முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, அனோமா கமகே, முன்னாள் கிழக்கு மாகாண தவிசாளர் கலப்பதி உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம)



இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் 91ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, காரைநகர் கசூரினா கடற்கரையில் வேலணை சுகுமாரின் கைவண்ணத்தில் மணல் சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. யாழ். இந்திய துணைத்தூதர் ராகேஸ் நடராஜ் மற்றும் அவரது காரியாலய குழுவினர் குறித்த மணல் சிற்பத்தைப் பார்வையிட்டதுடன் தமது அஞ்சலியைச் செலுத்தினர். (ய-20)

**A/L பௌதீகவியல் வகுப்புக்கள்**

தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.

சொ.குணவர்சன் BSc Agri, PGDE

077 5388 670, நல்லூர்.

**விற்பனை உதவியாளர் தேவை (பெண்கள்)**

நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் பெண்கள் வேலைக்குத் தேவை.

Note :- யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

076 166 1986

**வேலையாட்கள் தேவை**

கொழும்பில் உள்ள தமிழ் குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலை செய்யக் கூடிய தமிழ் பெண் தேவை.

தொடர்புகளுக்கு: 077 3866 250

## அதிபர் சேவைக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, ஒக். 16

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் அதிபர் சேவை வெற்றிடமாகக் காணப்படும் ஐந்து பாடசாலைகளுக்கு வட மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை அந்தந்தக் கல்வி வலய அலுவலகங்களில் பெற்று வலயக்கல்விப் பணிப்பாளரின் விதப்புரையுடன் ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், கோவிலாக்கண்டி மஹாலக்ஷ்மி வித்தியாலயம், சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம், சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம் ஆகியவற்றுக்கே இவ்வாறு அதிபர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. (ம14,9)



தலைமன்னார் பியர் முன்பள்ளி சிறார்களின் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்தச் சந்தை தலைமன்னார் பியர் ரயில் நிலையத்துக்கு முன்பாக உள்ள பேருந்து நிலையப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

# OBITUARY

## Mr. Deva Spencer



Mr. Deva Spencer, passed away peacefully in Jaffna, Sri Lanka on October13, 2022 after a brief illness. He was resident at the Kopay Lily Nursing Home. Deva was a Son of late Mr. S.R.Spencer and late Mrs. Sugirtham (nee Dwight) Spencer of Jaffna. He is a loving brother of the late Mani (and late Kingsley) Rajasenan, Ranji (and late George) Thambyrajah (Canada), Jeba (and Rajan) Gunaratnam (Canada), Thiru (and Bala) Abraham (Canada), late Thavam (and late Princely) Spencer, Sothy (and Gora) Sinnatamby (Canada) and Reuban (and Shanti) Spencer (UK). Funeral Service will take place on Monday, October 17, 2022 at 10.00 am at the White House Funeral Home in Jaffna, Sri Lanka, followed by burial at the Jaffna Methodist Cemetery. Deva was a past employee of the Bank of Ceylon, Colombo.

Contact:Bala Abraham
bsabraham@rogers.com
077 723 8300/077 844 8020

Family

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 - 07 - 1953 | 14 - 10 - 2022 |



### செல்வி இராசையா பாரிசாத புஷ்பம் (ராணி)

பழைய வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கட்டுடை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசையா பாரிசாத புஷ்பம் (ராணி) நேற்று முன்தினம் (14.10.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் செல்வராணி ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நவாலி வடக்கு குதனை வீதியில் அமைந்துள்ள பெறாமகளின் (ரூபி) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 004 9776

தகவல்: குடும்பத்தினர்

(CS 47132) (3/6)

## மரண அறிவித்தல்



### வல்லி மகாலிங்கம்

மயிலிட்டி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி மகாலிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லி குழந்தை தம்பதியரின் மகனும், பண்டாரி மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், பேபி கமலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னராசா, தியாகராசா, மல்லிகாதேவி மற்றும் இராசமணி, வண்ணக்கிளி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற யோகராசா, திலகராசா மற்றும் ஆனந்தராசா, சாந்திகமலா, உதயராசா, குமாரிகமலா, காந்தராசா, ஜெயந்தி கமலா ஆகியோரின் மைத்துனரும், ஜெயவதனி, ஜெயகவிதா (பிரதி அதிபர், யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி), ஜெயப்பிரபாகரன், சிவகரன், கௌசலா, துவாரகன், சசிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அவினாஷ், நவீன், அனஸ்கா, அன்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் குகதாஸ் (T.O), றுபினா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலிட்டி கொட்டப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலிட்டி வடக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 21265)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Accountant Vacancy

ஸ்ரான்லி வீதியில் இயங்கி வரும் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் (Accountant) மற்றும் கணக்கு உதவியாளர் (Account trainee) தேவை.

**தகைமை :** A/L வர்த்தகப்பிரிவு Diploma or Degree

**வயது :** எல்லை : 18 - 35 (CS 21245) (3/6)

**தொடர்பு : 076 567 4930**

nstmotorsstores@gmail.com

# வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (CS 21214) (3/6)

**தொடர்பு : 076 702 3565**

# வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம், 1ஆம் குறுக்குத்தெருவில் இயங்கி வரும் சிறுவர்களுக்கான ஆடை விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.

**வேலை நேரம் :** காலை (9.00 am - 9.00 pm)
(11.00 am - 9.00 pm)

முன் அனுபவமுள்ளவர்களும் வேலை பழக விரும்பு பவர்களும் விண்ணபிக்கலாம். அண்மையில் வசிப் பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (CS 21233) (3/6)

**077 870 2188**

## LUXURY APARTMENTS FOR SALE



**வெள்ளவத்தை காலி**
வீதிக்கு அருகாமையில் IBC Roadல்
**under Construction Apartments**
விற்பனைக்கு உண்டு
2,3,4 படுக்கையறைகள்
1500, 1400, 1200, 1100, 800sq.ft

Senior citizens மற்றும் அங்கவீனர்களுக்கான முற்றிலும் அதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தொடர்மாடி வீடுகள், முதல் முறையாக இலங்கையில்

✓ Bank Loan arrange பண்ணித்தரப்படும்.
✓ Completion 2023 December
✓ Interest Free 18 மாத தவணை கட்டணம் ஒழுங்குபடுத்தி தரப்படும்

Royal - T Construction ( Pvt ) Ltd
**077 522 2613**

# UK / CANADA குடி பெயர்வதற்கான வாய்ப்பு!!!

**குடும்பத்துடன் UK / Canadaவில் குடிபெயர்வதற்கான விசா**

நீங்கள் 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமானவராயின், உங்களுக்கு உங்களது குடும்பத்தினருடன் ஐக்கிய இராச்சியத்திற்கு மற்றும் கனடாவிற்கு சட்டபூர்வமாக சென்று குடிபெயர்வதற்கான ஓர் வாய்ப்பு!!!

**நீங்கள் J B P VISA SOLUTION ஐ தெரிவு செய்வது ஏன்?**

- 100% சரியான தகவல்களை வழங்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதல்
- எந்தவொரு தரகரும் இன்றி, 15 வருடங்கள் ஐரோப்பாவில் தங்கியுள்ள இலங்கை Consultant உடன் நேரடியாக தொடர்பு கொள்ள கூடிய வாய்ப்பு
- குறைந்த பட்ச சேவை கட்டணத்தில் ஆரம்பித்து மிகுதி பணத்தை தங்களது தேவை பூர்த்தியானதன் பின் செலுத்தக்கூடிய வாய்ப்பு
- ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்தவொரு நாட்டிலும், அல்லது இங்கிலாந்து மற்றும் கனடாவில் ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்று கொடுப்பது தொடர்பில் Solicitorsகளின் ஒத்துழைப்பு.

**தொடர்புகளுக்கு: 0743 898 485 | 0772 281 085**

E-Mail அனுப்புதல் : info@thevisasolution.com

**J B P VISA SOLUTIONS (PVT) LTD**

(Registered as a limited liability company in Sri Lanka PV 00203433)

www.thevisasolution.com

# தேவை

யாழ். நகரில் வீட்டில் அலுவலகம் அமைந்த வீடு ஒன்றில் சமையல் வேலை அலுவலகம் சுத்தம் செய்வதற்கு 35 வயதுக்குட்பட்ட பெண்கள் தேவை. அனுபவம் தேவையில்லை. தங்குமிடம் மற்றும் உணவு தரப்படும். (CS 47108) (3/6)

தொடர்பு: **077 710 2325**

# Lorry விற்பனைக்கு

**Mitsubishi Fuso Motor Lorry, WP/LM-xxxx Year 2015 Brand New Diesel Full Body Aluminium White**

( சிங்களம் / ஆங்கிலத்தில் பேசவும் )

தொடர்பு : 077 1750102 / 077 180 8871

# பெண் வரவேற்பாளர்

Female Receptionist

கொழும்பு 6 இல் பெண் வரவேற்பாளர் தேவை. உள்ளூர் மற்றும் வெளிநாட்டினருக்கான முன்னணி தங்கும் விடுதி ஒன்றிற்கு கணணி அறிவு, மற்றும் ஒரு வருட அனுபவமுள்ள வரவேற்பாளர் ( Receptionist ) தேவை

Contact : 077 991 9388

# தேவை

**HOUSE KEEPER**

வெள்ளவத்தை Apartment விடுதி ஒன்றிற்கு வீட்டு பராமரிப்பாளர்

ஒரு வருட அனுபவமுள்ள ஆண் ஒருவர் தேவை ( Apartment Cleaning )

வயதெல்லை ( 18 – 50 )

TP : 077 991 9388

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மல்லாகத்தில் சோடாக் கொம்பனி ஒழுங்கையில் (K.K.S வீதியில் இருந்து 100m தூரத்தில் ) நல்ல சூழலில் 06 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (CR 38288) (3/6)

தொடர்புகளுக்கு **077 131 0530**

# வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு நாளாந்தம் வீட்டு வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (CS 21236) (3/6)

தொடர்பு: **076 564 6282**

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1993 இல் பிறந்த, ரோகினி நட்சத்திரம், கிரகபாவம் 44, வைத்தியராக கடமையாற்றும் மணமகனுக்கு அதே தகைமையுடைய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 633 4386**

# விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், ரம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஊந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம் கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

# காணி விற்பனைக்கு - மன்னார் விடதல்தீவு

மன்னார் நகரிலிருந்து 14Km தூரத்தில் விடத்தல்தீவு ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் மன்னார் - யாழ்ப்பாணம் (A 32) Highway வீதியை முகப்பாக கொண்ட 48 ஏக்கர் காணி தூய உறுதியுடன் விற்பனைக்கு உண்டு. சுற்றிவர திடமான வேலி போடப்பட்டுள்ள இந்தக் காணியின் வடகிழக்கு எல்லையில் இயற்கையாகவே அருவியொன்றும் அமைந்துள்ளதால் வருடம் முழுவதும் தாராளமான நீர் வசதியும் உள்ளது. இறால் வளர்ப்பு Farm, மீன் வளர்ப்பு, குடிநீர் திட்டம், தென்னை பயிர்செய்கை, மற்றும் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கும் சமீபமாக இருப்பதால் ஹோட்டல் மற்றும் சுற்றுலா மையம், பெற்றோல் நிலையத்துடன் கூடிய அங்காடி போன்றவற்றிற்கு உகந்தது.

**எதிர்பார்க்கும் விலை, ஒரு ஏக்கர் 06 இலட்சம் விகிதம்**

குறிப்பு: இரண்டு படுக்கையறை, தண்ணீர், மின்சாரம், மற்றும் இணைந்த குளியலறையுடன் வீடொன்றும் காணியில் உண்டு.

தொடர்புகளுக்கு:

**077 3077313 / 071 8350350 / 0777 897477**

**sskcolombo@gmail.com**

# உரம் வழங்குவதற்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 16

கைதடி நாவற்குழி கமக்காரர் அமைக்குட்பட்ட விவசாயி கள் அனைவரும் 2022 2023 ஆம் ஆண்டுக்கான பெரும்போக சூழல்நேய மானிய உரம் பெற விண்ணப்பிக்க விரும்புவோர் கமக் காரர் அமைப்புடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கமநலசேவைகள் நிலையத்தில் சமர்ப்பித்து உரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் இதுவரை முதலாம்கட்ட இரசாயன உரம் பெறாதவர்கள் தமக்கான உரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (ஒ-14)

# காணி விற்பனைக்கு

மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் A9 வீதிக்கு அருகாமையில் 10 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்குண்டு.

**077 438 4866**

# தேவை

தையல் வேலை தெரிந்த ஆண்/பெண் இருபாலாரும் மற்றும் போன்சொப்பில் வேலை செய்வதற்கும் வேலையாள்கள் தேவை. (தையல் மெசின் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் நவீன சந்தை, மேல்மாடி (CS 21230) (3/6) **077 361 1282**

# நாகபூஷணி திருமண சேவை

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.** (CS 21247) (3/6)

**077 138 7596, 071 999 9306**

# கட்டடம் வாடகைக்கு

சாவகச்சேரி நகரில் A9- வீதியில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக சகல வசதிகளுடன் கூடிய2500 சதுர அடி கொண்ட 3 மாடி கட்டடம் வாடகைக்கு உண்டு. (வங்கி, நிறுவனங்கள், காரியாலயங்கள், தனியார் மருத்துவ நிலையங்கள் நடத்துவதற்கு உகந்தது.

**மேலதிக விபரங்களுக்கு:**

**0044 754 383 7830**

# காணி விற்பனைக்கு

சங்கானை நகரத்தில் இருந்து 500m தூரத்தில் அமைந்துள்ள 3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை

**தொடர்பு : 077 374 4652** (CS 21239) (3/6)

# காணி விற்பனைக்கு

சிறுப்பிட்டி வடக்கு சிறுப்பிட்டி மடத்தடி வீதியில் பருத்தித்துறை வீதிக்குச் சமாந்தரமாக 100M தூரத்தில் அமைந்துள்ள இரண்டு பரப்பு உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு (விலை பரப்பு 3.2 மில்லியன்) விலை தொடர்பில் பேசித்தீர்மானிக் கலாம். தரகர்கள் தேவையில்லை. (CS 1039) (3/6)

**தொடர்பு : 076 769 4449**

# வாழ்த்துக்கள்

**37 வருடங்கள் ஆசிரிய பணியாற்றி 16.10.2022 இல் மணிவிழாக்காணும்**




திருமதி
**சோமகலா திருஞானமூர்த்தி**
அவர்களை வாழ்த்துவதில் நாம் பெருவகை அடைகின்றோம்.

வாழ்கவளமுடன்
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு

தோற்றம் 17 - 01 - 1939



மறைவு 28 - 09 - 2021

கடந்த 28.09.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் மடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் இளையதம்பி இரத்தினசிங்கம்


ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை தந்தையே! - உங்கள்
இன்முகமும், புன்சிரிப்பும்
எம்மனம் விட்டு அகலவில்லை
காதவழி தூரமெல்லாம் கால் கடுக்க நடந்தாலும்
தேடாத இடமெல்லாம் தேடி நாம் திரிந்தாலும்
பப்பாவே உங்களைப் போல் இனியொருவர்
எங்களுக்குக் கிடைத்திடாது
எங்களின் வளமான வாழ்விற்கு வழிகாட்டி நின்றவரே!
ஏற்றிய எம்மனங்களில் என்றும் நிறைவீர்...!

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யும் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (CS 21229) (3/6) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 - 09 - 1944



இறப்பு 12 - 10 - 2022

### சிவசுப்பிரமணியம் சிவப்பிரகாசம்

தொட்டிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவப்பிரகாசம் கடந்த (12.10.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் சிவக்கொழுந்து தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சடாசிவம், கமலமணி தம்பதியினரின் மருமகனும், புகழினி (சுமணா-Germany) அவர்களின் அன்புத் தந்தையும், தர்மராசா (சுதன் - Germany) வின் மாமனாரும், காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் பாக்கியலட்சுமி, விஜயலட்சுமி (Germany) அன்னலட்சுமி, சிவபாதசுந்தரம் (Germany), சிவலிங்கம் (France), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற விஜயகாந்தன், நடராசா, விஜயகுமார் மற்றும் இரட்ணகுமார், லலிதறூபலீலா, குமுதினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

(CS 47136) (3/6)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திரு. கனகசபாபதி செல்வரத்தினம்

(உரிமையாளர் - சங்குசக்கரம் ஸ்ரோர்ஸ், சங்கானை)

அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த கனகசபாபதி செல்வரத்தினம் கடந்த (14.10.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கனகசபாபதி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் திருப்பதி தம்பதியரின் அன்பு மருமகனும், பூவண்ணமலர் (ஜெயா) அவர்களின் அருமைக் கணவரும், அகிபனின் (மாணவன் வட்டு இந்துக் கல்லூரி) பாசமிகு தந்தையும், வீரவாகு (யுனிலங்கா ரீ ரேடர்ஸ் - கொழும்பு) இரட்னேஸ்வரன் (ஓய்வு நிலை அதிபர்), ஆறுமுகராஜா (இத்தாலி), தவதேவி (உடுப்பிட்டி), செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புவனேஸ்வரி (உடுப்பிட்டி), இலட்சுமி, இந்திராணி (இத்தாலி), சிவபாதசுந்தரம் (நில அளவையாளர்) விஜயநாதன் (துன்னாலை), றெஜினா ஆகியோரின் மைத்துனரும், சுகந்தனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி,
சங்கானை

(CS 21186) (3/6)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 04 . 1943



மறைவு 14 . 10 . 2022

### அப்பையா தம்பித்துரை

(பிரபல வர்த்தகர், கட்டட ஒப்பந்தகாரர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் டச்சுறோட், கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா தம்பித்துரை 14.10.2022 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையா - லட்சுமி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கந்தையா - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சுரேஸ்குமார் (சுவிஸ்), றெஜினா (கனடா), தினேஸ்குமார் (சுவிஸ்), கேதீஸ்வரி, ஜெயவதனி (லண்டன்), நளாயினி, ரமேஸ்குமார் (NAITA -கணினி விரிவுரையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரா (கனடா), கவிதா (சுவிஸ்), ஜெனிற்றா (சுவிஸ்), முருகானந்தன் (சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர்- தொழில்திணைக்களம் - மன்னார்), பாபுதரன் (லண்டன்), கனிஸ்ரஸ் (வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் - தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்), றேமினா (ஆசிரியை - மானிப்பாய் மெமொறியல் ஆங்கில பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அனோசன், அமிசா, ஆர்த்திகா, ஆர்த்திசன், ஆத்மிகா, டுவர்சிகா, மிதுரன், றகீத், றிதீஸ், றனோமி, டணியா ஆகியோரின் பாசமிகு பேரனும், பூமாதேவி, ராசேந்திரம், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், சிவலிங்கம் (சந்திரன்), தவராசா மற்றும் விஜயராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.10.2022 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

ரமேஸ்குமார் (மகன் - 077 809 3293)
(மருமகன் - 077 379 4115)
கனிஸ்ரஸ் (மருமகன் - 077 783 9699)

தகவல்
குடும்பத்தினர்

(cs.20578) (2.6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு. தேவா ஸ்பென்சர்

**(முன்னாள் பணியாளர்-இலங்கை வங்கி, கொழும்பு கிளை)**

மானிப்பாயை பிறப்பிடமாகவும் தற்போது கோப்பாய் லில்லி வயோதிபர் இல்லத்தில் வசித்தவருமான திரு.தேவா ஸ்பென்சர் கடந்த (13.10.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.R.ஸ்பென்சர் சுகிர்தம் ஸ்பென்சர் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற மணி - (கிங்ஸ்லி) இராஜ சேனன், ரஞ்சி காலஞ்சென்ற (ஜோர்ச்), தம்பிராஜா (கனடா), ஜெபா- (ராஜன்) குணரட்ணம் (கனடா), திரு (பாலா) ஆபிரகாம் (கனடா), காலஞ்சென்ற தவம் (பிறின்ஸ்லி) ஸ்பென்சர், சோதி (கோரா), சின்னத்தம்பி (கனடா) மற்றும் ரூபன் (சாந்தி) ஸ்பென்சர் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (17.10.2022) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் யாழ். கண்டி வீதியில் அமைந்துள்ள வைற் கவுஸ் மலர்சாலையில் நடைபெற்று, பூதவுடல் யாழ். மெதடிஸ் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Contect:
E-mail:bsabraham@rogers.com
0777 238 300 / 077 844 8020

தகவல்:
பாலா (ஆபிரகாம்)

(CS 21250) 1/6

# தேவை

எமது நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1) English Teachers / Trainee Teachers
2) IT Teachers / IT Lecturers
3) Project Assistant (Female)
4) Receptionest
5) Project Officers

உங்களது Bio-Data பின்வரும் Whats app Number இக்கு அனுப்பவும். 076 1062 120

**HSTC, 18/5, Mahathma Ganthi Road, Jaffna.**
(பழைய பொலிஸ் நிலையம் / மணிக்கூட்டு கோபுரம் அருகாமையில்))
**Contact No: 077 628 5458**

**SHANTHIHAM**
Association for Health & Counselling

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சாந்திகம் உளவளத்துணை நிறுவனத்தினால் UNICEF அமைப்பின் நிதியனுசரணையில் "மீள்குடியேற்றம் மற்றும் மீள் ஒருங்கிணைப்பிற்கான விரிவாக்கப்பட்ட ஆதரவு வழங்கல்" செயற்திட்டத்தின் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள "பொருளாதார நெருக்கடிச் சூழலில் அவசர கால உதவி" எனும் செயற்திட்டத்தில் கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இப் பதவி வெற்றிடங்களுக்குப் பொருத்தமான தகைமையுடை யோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தக்காலம் - 6 மாதங்கள். தகுதியுள்ளோர் தங்களின் சுயவிபரக்கோவையினை 2022.10.23 ஆம் திகதிக்கு முன்னதாக கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## பதவி வெற்றிடங்கள்

**நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் (Project Coordinator) – 01 (கிளிநொச்சி, முல்லைத்தீவு)**
சமூக விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் சார் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**பயிற்சி இணைப்பாளர் (Training Coordinator) – 01 (கிளிநொச்சி, முல்லைத்தீவு)**
சமூக விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் சார் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருப்பதோடு 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும் **அல்லது** பொருத்தமான ஏதாவது துறையில் டிப்ளோமாவினை பெற்றிருப்பதோடு 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**உளவளத்துணையாளர் (Counsellor) – 01 (கிளிநொச்சி, முல்லைத்தீவு)**
உளவளத்துணையில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**கள உள சமூக அலுவலர் (Field Psychosocial Worker)-03 (கிளிநொச்சி, முல்லைத்தீவு)**
குறைந்தது உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்திகளைப் பெற்றிருப்பதுடன், கள உள சமூகப்பணியில் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

No.8,8/1, Katpahavinayakar Lane,
Off-Kachcheri Nallur Road, Jaffna.
021-222-3338
Email To – hr.shanthiham@gmail.com

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 03 . 1950



மறைவு 14 . 10 . 2022

## திரு.செல்வராஜா நாகலிங்கம்(NSR)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வவுனியா கூமாங்குளத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வராஜா (NSR) அவர்கள் கடந்த (14.10.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் அம்பிகாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற நடராஜா குணநிதி தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாவின் அன்புக் கணவரும், செல்வராணி, பேரின்பரஜனி, மாலினிதேவி, கனேஸ்வரி, மோகனராஜா மற்றும் காலஞ்சென்றவர்களான (பத்மினிதேவி, கலாநிதி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதாரனி மற்றும் காலஞ்சென்ற தீரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கூமாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நூலக வீதி, கூமாங்குளம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
071 172 1858

# மரண அறிவித்தல்



## செந்தில்வேல் இரவீந்திரன்

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட செந்தில்வேல் இரவீந்திரன் நேற்று (15.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செந்தில்வேல் - காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்சிகா, தனுஷா, நிரோஜன் (பிரான்ஸ்), லோசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிருபராஜ், விவேகன் ஆகியோரின் மாமனாரும், அக்ஷயா, கபிசாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2022) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:- 077 180 1335

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21250) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடலட்டைப் பண்ணைகளால் பாரம்பரிய தொழில் பாதிப்பு

## இலவங்குடா மீனவர்கள் மீண்டும் சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, ஒக். 16**

**கிளிநொச்சி கிராஞ்சி, இலவங்குடா கடலில் தமது பாரம்பரியத் தொழில்கள் பாதிக்கப்படும் வகையில் சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அமைத்து தொழில் மேற்கொள்ளப்படுகிறது என இலவங்குடா மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

இலவங்குடா பகுதியில் பாரம்பரிய மீன்பிடித் தொழில் பாதிக்கப்படும் வகையில் கடல் அட்டைப் பண்ணை அமைத்து தொழிலில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மீனவர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அட்டைப் பண்ணை அமைப்பதற்காக கடற்கரையோரமாக இருக்கின்ற கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் மீன் பெருக்கம் தடைப்படுவதுடன் பாரம்பரிய மீன்பிடித் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பெரிதும் தமது வாழ்வாதாரத்தை இழக்கின்றன. இதுகுறித்து மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறையிட்டுள்ளோம். அட்டைப் பண்ணை அமைப்பதற்கு எந்தவித பரிந்துரையையும் வழங்கவில்லை என மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எனவே இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் தீர்வைப் பெற்று எமது கடல்வளத்தைப் பாதுகாக்க வேண்டும்- என்றனர். (ச-20)


# Invest with us to reward your future

COMMERCIAL CREDIT

FIXED DEPOSITS (Rates at Maturity)

LESS THAN RS. 1 MN

| MONTHS | MATURITY | AER |
|---|---|---|
| 3 | 27.00% | 29.86% |
| 5 | 29.00% | 31.49% |
| 8 | 25.00% | 26.01% |
| 12 | 26.00% | 26.00% |

RS. 1 MN - 5 MN

| MONTHS | MATURITY | AER |
|---|---|---|
| 3 | 27.25% | 30.16% |
| 5 | 29.25% | 31.79% |
| 8 | 26.00% | 27.10% |
| 12 | 27.00% | 27.00% |

RS. 5 MN - 10 MN

| MONTHS | MATURITY | AER |
|---|---|---|
| 3 | 27.50% | 30.47% |
| 5 | 29.50% | 32.08% |
| 8 | 27.00% | 28.18% |
| 12 | 28.00% | 28.00% |

RS. 10 MN - 50 MN

| MONTHS | MATURITY | AER |
|---|---|---|
| 3 | 27.75% | 30.77% |
| 5 | 29.75% | 32.37% |
| 8 | 27.25% | 28.45% |
| 12 | 28.25% | 28.25% |

RS. 50 MN - 100 MN

| MONTHS | MATURITY | AER |
|---|---|---|
| 3 | 28.50% | 31.69% |
| 5 | 30.00% | 32.67% |
| 8 | 27.50% | 28.72% |
| 12 | 28.50% | 28.50% |

ABOVE RS. 100 MN

| MONTHS | MATURITY | AER |
|---|---|---|
| 3 | 29.50% | 32.93% |
| 5 | 30.50% | 33.26% |
| 8 | 28.00% | 29.27% |
| 12 | 29.00% | 29.00% |

*Rates mentioned are w.e.f 10.10.2022 and subject to change as per the regulation

"Eligible deposit liabilities are insured with the Sri Lanka Deposit insurance scheme implemented by the Monetary Board for compensation up to a maximum of Rs. 1,100,000/- per depositor"

0112 000 000

COMMERCIAL CREDIT AND FINANCE PLC

HEAD OFFICE No. 106, Yatinuwara Veediya, Kandy. Tel : 081 2 000 000

CITY OFFICE No : 165, Kynsey Road, Colombo 08. Tel : 011 2 111 000

A Finance company licensed by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Business Act No. 42 of 2011
Company Registration No. : PB 269 PQ. | Date of Incorporation : 1982.10.04 ICRA Rating (SL) BBB Stable

COMMERCIAL CREDIT


# மண்மேடு சரிந்து பெண் உயிரிழப்பு!

## வரக்காபொலவில் துயரம்

கொழும்பு, ஒக். 16



இரண்டு மாடிகளைக் கொண்ட வீட்டின் மீது மண்மேடு சரிந்ததில் குடும்பப்பெண் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வரக்காபொல கும்பலியத்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நிகழ்ந்துள்ளது. வீட்டின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததால் வீட்டிலிருந்த அனைவரும் மண்மேட்டுக்குள் சிக்கியுள்ளனர்.

பின்னர், இராணுவத்தினரும் அந்தப் பகுதி மக்களும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் உயிரிழந்த நிலையில் குடும்பப்பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது என்று கேகாலை இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ம-14.இ)

# 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண நிலை காரணமாக களுத்துறை ஹொரணையில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 194.50 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. தெற்கில் பலர் கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# வடமாகாணத்தில் மழை தொடரும்!

வடமாகாணத்தில் அடுத்த சில தினங்களுக்கு மழை தொ... ரும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள... தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்கள... அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உ... ளதாவது:-

நாட்டை அண்மித்த பகுதிகளில் குறைந்த மட்ட வளிமண்டல குழப்பம் இன்னும் நீடிப்பதால், தீவின் பெரும்பாலா... பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மே... சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கா... மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது ம... அல்லது இடியுடன் கூடிய மழையும் சில இடங்களில் 100 மில்... மீற்றருக்கும் அதிகமான பலத்த மழையும் பெய்யக்கூடு... நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் அல்லது இ... வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெ... யும். சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமா... கனமழையை எதிர்பார்க்கலாம். இடியுடன் கூடிய ம... யின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசுவதுட... கடல் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

எனவே, இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்- என்றுள்ளது. (ம-14.இ)

# திலினி பிரியமாலி மீது மேலும் இரு முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 16

பல கோடி ரூபா மோசடி தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி மீது மேலும் இரு பண மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

75 கோடி ரூபா மோசடி செய்தார் என திலினி பிரியமாலி மீது தொழிலதிபர் ஒருவர் முறைப்பாடளித்துள்ளார். அத்துடன் 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளார் என்று கொழும்பில் வசிக்கும் பிறிதொருவராலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு முறைப்பாடுகளையும் சேர்த்து, திலினி பிரியமாலி மீது பணம் மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 11 ஆகும். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு**
திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. முற்பணம் - 250,000/= வாடகை-25,000/= 077 9938 348

**சாரதி தேவை**
ஒளி அகம் அந்தியகால சேவை மந்திகைக் கிளைக்கு சாரதி தேவை. மந்திகையில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
077 7722 448

# மரண அறிவித்தல்



## திருமதி தவமேரி மகேந்திரராசா

ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமேரி மகேந்திரராசா 12.10.2022 புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற ஜோசப், திரேசம்மா ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நடராசா, நாகம்மா ஆகியோரின் மருமகளும், மகேந்திரராசாவின் அன்பு மனைவியும், மதன் (செல்வா ஹாட்வெயார்), சாமினி (லண்டன்), தனுஷா (கனடா), அமுதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெனற்( ஆசிரியர் புங்குடுதீவு), வொசிங்டன் (லண்டன்), அன்ரன் (கனடா), செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரியன்ஜன், அற்றியன், ஈத்தன், ஜவின், ஜனலின், செந்துஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (17.10.2022) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணியளவில் (கொய்யாத்தோட்டம்) கிறிஸ்துஅரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்பு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**42, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 303 2499, 076 224 2730**

(CR 7288)1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 05 . 1987



மறைவு 14 . 10 . 2022

## அன்னலிங்கம் கிரிஷாத் (மிராஜ்)

சிவன் வீதி, பரவைக்குளம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் கிரிஷாத் (மிராஜ்) கடந்த (14.10.2022) வெள்ளிக்கிழமை அகால மரணம் அடைந்தார்.
அன்னார் அன்னலிங்கம் விஜயகுமாரி தம்பதியரின் அன்பு மகனும், பிரசாத்தின் ஆசைத் தம்பியும், சிந்துஜாவின் மைத்துனரும், அமரர் சின்னத்தம்பி செல்லம்மா, அமரர் இராமசாமி பொன்னம்மா ஆகியோரின் பேரனும், பூபாலசிங்கம், தனபால சிங்கம், சிவலிங்கம், திருச்செல்வம் (சுவிஸ்), சண்முகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பெறா மகனும், செல்வராணி (கொலன்ட்), சந்திரமலர் (பிரான்ஸ்), சுசிகலா (கனடா) ஆகியோரின் மருமகனும், ஸ்ரீரங்கநாதன் (ஜேர்மனி), யோகநாதன், கோபிநாதன் ஆகியோரின் மருமகனும், மைனாவதி, தர்மாவதி, மதுராம்பிகை (கனடா), உதயகுமாரி, சுசீலாம்பிகை (கனடா), சுபாசினி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2022) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யாழ்.கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்பு:- 077 1830309 077 974 1542**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 22596)

*மாநகரசபை...*

உடனடியாக வழங்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாநகர சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.
சபையின் செப்ரெம்பர் மாத அமர்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் ஆதரவு தரப்பினர் தவிர்ந்த ஏனைய கட்சிகள் சபை அமர்வில் வெளிநடப்பு செய்தனர். இதனையடுத்து செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவை யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் இடைநிறுத்தியுள்ளார். கூட்டத்தில் முழுமையாகப் பங்குபற்றியவர்களுக்கு உரிய முறையில் வேதனம் வழங்கப்படும் என்று இது தொடர்பில் மேயர் பதிலளித்திருந்தார்.
மாநகர மேயரின் இந்த நடவடிக்கை தொடர்பில் சபை உறுப்பினர்கள் 5 பேர் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் முறையிட்டிருந்தனர். அத்துடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையிலும் முறைப்பாடு செய்திருந்தனர்.
இந்த நிலையில் சபை உறுப்பினர்களின் கொடுப்பனவை வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பணித்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மாநகர மேயரின் கருத்தை அறிந்து கொள்ள முற்பட்டபோதும் அது பயனளிக்கவில்லை. (அ-ஒ-5-26)

*பெற்றோல்...*

குழந்தை தவறி விழுந்து உயிரிழந்துள்ளது.
மன்னார் அகத்திமுறிப்பைச் சேர்ந்த அம்யன் பாத்திமா அமனா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
கடந்த 13ஆம் திகதி தந்தையின் மோட்டார் சைக்கிள் பெற்றோல் தாங்கியிலிருந்து குறித்த குழந்தை பயணித்துள்ளது. இதன்போது தந்தை ஒரு கையால் மோட்டார் சைக்கிள் பெற்றோலை 'ரிசேர்வ்வுக்கு' மாற்றும்போது, வீதியின் அருகே நின்ற பட்டா ரக வாகனத்துடன் மோதியுள்ளார். இதன்போது குழந்தை கீழே விழுந்துள்ளது. மயங்கிய நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தை சேர்க்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் குழந்தை நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது.
இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

*வவுனியா...*

குள்ளானதில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
நேற்று மாலை 5.40 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், வவுனியா, வெளிக்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா தவராசா (வயது - 65) என்பவரே உயிரிழந்துள்ளார்.
வவுனியா புதிய பேருந்து நிலையத்திலிருந்து மாலை 5.30மணிக்கு மன்னார் நோக்கி புறப்பட்ட இ.போ.சபை பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக வவுனியா மருத்துவமனை சுற்றுவட்ட வீதியூடாக குடியிருப்பு நோக்கிச் சென்றபோது, மருத்துவமனை வீதியிலிருந்து குடியிருப்பு நோக்கி திரும்பிய துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.
விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விபத்தையடுத்து இ.போ.ச. பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-இ)

*கொத்து...*

எடுக்கவுள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

*பாண்...*

மற்றும் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியாது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.
'மாவை விநியோகிக்கும் இரு நிறுவனங்களும் விலையைக் குறைக்கும் என்பதை நம்பமுடியாது. விலை குறைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டாலும் சந்தையில் 350 ரூபாவுக்கே மா விற்கப்படுகின்றது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-ஒ-இ)

*ரயில்...*

மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து கொடிகாமத்தில் நேற்று இரவு நடைபெற்றது. விபத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த கந்தக்குட்டி சுந்தரம் (வயது -67) என்பவரே உயிரிழந்துள்ளார்.
அருகிலுள்ள குறித்த நபர் தனது வீட்டுக்கு பாதுகாப்பற்ற கடவையூடாகச் செல்ல முயன்றபோதே விபத்துக்குள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-26)

*பளையில்...*



தடம்புரண்டது. அதில் பயணித்த 47 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
காயமடைந்தவர்களில் 15 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், ஏனையவர்கள் கிளிநொச்சி மாவட்ட மற்றும் பளை பிரதேச மருத்துவமனைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்று மு.பகல் 11 மணியளவில் மிதிவெடி அகற்றும் பணியாளர்களை கிளிநொச்சியிலிருந்து முகமாலை நோக்கி ஏற்றிச் சென்ற பேருந்து ஏ -9 வீதியில் இருந்து முகமாலையிலுள்ள தங்களுடைய இருப்பிடத்துக்கு திரும்ப முற்பட்ட போது பின்னால் வந்த டிப்பர் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது என ஆரம்பக் கட்டவிசாரணைகளில் தெரியவந்துள்ளது.
(அ-ஒ-26-113-125-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மா விலையில் மாற்றமில்லை

## பிரீமா நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 16

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 290ரூபாவாகக்குறைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதி மற்றும் விநியோகஸ்தர்கள் சங்கம் அறிவித்திருந்தாலும், தமது நிறுவனம் ஒரு கிலோகிராம் கோதுமை மாவை 283 ரூபா வீதமே விற்பனை முகவர்களுக்கு தொடர்ந்தும் விநியோகித்து வருவதாக பிரீமா நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.


கோதுமை மாவை இறக்குமதி செய்து விநியோகிக்கும் வர்த்தகர்களே மாவின் விலையை அண்மையில் அதிகரித்திருந்ததாகத் தெரிவித்த அவர் தமது நிறுவனம் விலையில் எந்தவித மாற்றத்தையும் செய்யவில்லை எனவும் சுட்டிக்காட்டினார். (அ-ஒ-இ)

### உயிர்கொல்லி...

மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபர்கள் நேற்று சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்குபேரும் 19, 23, 24, 26 வயதுகளை உடையவர்கள். உடுவில் - மல்வம், கல்லுண்டாய், வட்டுக்கோட்டை, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள 3 புடைவை விற்பனை நிலையங்களில் பணியாற்றுபவர்கள்.



சந்தேகநபர்கள் தமது புடைவைக் கடைகளில் வைத்தும், போதனா மருத்துவமனைக்கு பின்புறமாக வைத்தும் உயிர்கொல்லி போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்துள்ளனர்.

இவர்கள் உயிர்கொல்லி போதை மாத்திரை அடங்கிய ஒரு கார்ட்டை ஆயிரத்து 500 ரூபாவுக்கும், ஒரு மருந்து வில்லையை 250 ரூபாவுக்கும் விற்பனை செய்துள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தியாவுக்குச்சென்று வரும் தமிழ் வர்த்தகர் ஒருவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பேருந்தில் உயிர்கொல்லி போதை மாத்திரைகள் அடங்கிய 'பார்சலை' அனுப்புவார் என்றும் யாழ். நகர் நாவலர் வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் அதனைப் பெற்றுக்கொள்வதாகவும் சந்தேகநபர்கள் விசாரணைகளின் போது குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், இந்தியாவிலிருந்து மன்னாருக்கு உயிர்கொல்லி போதை மாத்திரைகளைக் கடத்தும் மருத்துவர் ஒருவரிடமிருந்தே இவர்கள் இதனைக் கொள்வனவு செய்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் உயிர்கொல்லி ஹெரோய்ன் வியாபாரிகள் பலர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு வரும் நிலையில், அதற்கு மாற்றீடாக உயிர்கொல்லி போதை மாத்திரைகள் பயன்படுத்துவது அதிகரித்து வருவதாக பொலிஸார் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற பெண் ஒருவர் உயிர் கொல்லி போதை மாத்திரைகளுடன் கிளிநொச்சியில் சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார். கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இருவர் உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். இதன் தொடர்ச்சியாக பிரதான சூத்திரதாரி உள்ளிட்ட 4 பேரை நேற்று கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-5-26-125)

### வெற்றிலைக்கடை...

பாக்கு விற்பனையில் ஈடுபட்டு வந்த சந்தேகநபரை கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பாடசாலையிலிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ள கடையொன்றில் வெற்றிலை விற்பனை என்ற போர்வையில் நீண்ட நாள்களாக உயிர்கொல்லி போதைப்பாக்கு விற்பனை இடம்பெற்று வருவதாகவும், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அதற்கு அடிமையாவதாகவும் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக நேற்றுச் சோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது 5 உயிர்கொல்லி போதைப் பாக்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 31 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-125)

### கைதான...

நிலையில் நேற்றுக் காலை பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் புலனாய்வாளர்கள் முன்னெடுத்த விசாரணைகளின் போது, அல்வாய் பகுதியில் வைத்து 23 வயதுடைய ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 3 பவுண் தாலி, 2 பவுண் சங்கிலி, மோட்டார் சைக்கிள் மற்றும் ஐ போன் ஒன்று என்பன கைப்பற்றப்பட்டன. அத்துடன் சந்தேக நபரின் உடைமையிலிருந்து 3 கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது. இவருடன் இணைந்து கொள்ளையில் ஈடுபட்டனரெனச் சந்தேகிக்கப்படும் மேலும் இருவரும் தலைமறைவாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை சிறைக்கூண்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் குற்றங்களை தடுப்பதில் பொலிஸார் அசமந்தமாகச் செயற்படுவதாக 'உதயன்' சுட்டிக்காட்டியிருந்தது. அது தொடர்பில் பொலிஸ் உயர்மட்டங்களிலிருந்து பிரயோகிக்கப்பட்ட அழுத்தத்தையடுத்தே இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26)

# மரண அறிவித்தல்



## திரு. வேலுப்பிள்ளை கனகலிங்கம்

வேலணை ஏழாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (14.10.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நீலாம்பிகையின் அன்புக் கணவரும், கலாறஜனி, கருணாநிதி (பிரான்ஸ்), கபிலானந்தன் (கனடா), நிலாகரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம், சுந்தரலிங்கம், சண்முகலிங்கம், நாகேஸ்வரி, மகாதேவன், சற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிற்றம்பலம், நாகபூசணி, கிருஷ்ணபிள்ளை மற்றும் குணபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கபிலன், றேபிக்கா யோன், விகிதா, அமுதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரபன், பிரணவி, கஜனி, மத்தியூயேம்ஸ், மார்த்தா, சாஜனா, சாருகாஸ், அஸ்வின், அபிரா, அக்சரன், அஸ்விதா, ஆத்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேலணை சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு
21.04.1941

இறப்பு
[illegible]

59, [illegible] வீதி,
[illegible] யாழ்ப்பாணம்.

(CS 21243) (3/6)

தகவல்:
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**சில வருடகாலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்று முதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.**

- பான்ஸிப் பொருட்கள்
- பை (Bag) வகைகள்
- மாபிள் வகைகள்
- பாதணி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- குடை, மழைக்கவசங்கள்
- தையல் உபகரணங்கள்
- பாடசாலை பொருட்கள்
- கவரிங் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- சில்வர் பொருட்கள்
- கிளாஸ் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- முகக் கவசங்கள் (Mask)
- மணிக்கூடுகள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

**சரவணபவன் பான்ஸி ஹவுஸ்**
**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன் (செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்:- தே.கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- **பார்வையிடும் நேரம்**
  காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- **ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 09 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மூன்று பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பார்வையிடும் நேரம்
  காலை 09.00- மாலை 06.00 மணி வரை

தொடர்பு- **0776234204**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு**

- ✓ ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- ✓ யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- ✓ 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம் பார்வையிடும் நேரம்:
- ✓ காலை 06.00 - மாலை 6.00

**தொடர்பு: 077 911 6983**
**076 755 8606**

**மின்சாரம் துண்டித்து விட்டதா?**
**மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?**
**இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்**

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும் **J.J GROUP** 021 222 8854
(CS 21133)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

# காணி விற்பனைக்கு

ஊர்காவற்துறை கரம்பன் புனித வேளாங்கன்னி திருத்தலத்திற்கு அருகாமையில் 14 பரப்பு மேட்டுக்காணி 2 சேதமடைந்த வீடுகளுடனும் 2 கிணறுகளுடனும் விற்பனைக்குண்டு. தூய உறுதி கொண்டது. வீடுகள் அமைப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும், பண்டசாலை களஞ்சியங்கள் அமைப்பதற்கும் உகந்தது.
(CS 47092) (3/6) தொடர்பு : **077 313 1426**



# இலவச அமெரிக்க லொத்தர் விசா

2024 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.
(18 வயதிற்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)
2002 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுவரும் இச் சேவையினூடாக 1000க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்.
தொடர்புகளுக்கு : **0777554528**
**திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்**
321, K.K.S.Road, Jaffna.

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் ஆடியபாதம் வீதியில் இருந்து 150 m தூரத்தில நல்ல சூழலில் 1 1/2 பரப்புக் காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.

**077 229 0303, 075 749 8936**

# மணமகள் தேவை

1980 இல் பிறந்த மூல நட்சத்திரம் 2ஆம் பாதம் உதயத்துச் செவ்வாய் தனியார் துறையில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. இந்து. கிறிஸ்வதம் இரு மதங்களும் விரும்பப்படும். (CS 47071) (3/6)

தொடர்பு: **075 901 1369**

# ஆண், பெண் புதிய பணியாளர்கள் தேவை

பான்சி கடை (online) க்கு 18 - 35 வயது வரை உள்ள ஆண். பெண் பணியாளர்கள் முழுநேர. பகுதி நேர. Online மூலம் (வீட்டில் இருந்து) போன்ற வேலைகளுக்கு வேலையாள்கள் தேவை. வேலை நேரம் 9.00 - 07.00 வரை சம்பளம் 20, 000 - 50, 000/-

**இல. 55, முஸ்னீவரன் வீதி, யாழ்ப்பாணம். Town.**
**076 483 7761, 077 153 6914**
(CS 21215a) (3/6)


## வெள்ளைப்பிரம்பு தினத்தில் யாழ்ப்பாணத்தில் பேரணி!

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகத்தில் விழிப்பு ணர்வுப் பேரணியொன்று நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. வாழ்வகம் மற்றும் லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது. சுன்னாகத்தி லிருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமான பேரணி பேருந்து நிலையம் வழியாக வாழ்வகத்தைச் சென்றடைந்தது. வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவம், விழிப்புலனற்ற வர்கள் வீதியில் நடமாடுவதில் உள்ள இடையூறுகள், விழிப்புலன் அற்றவர்களை முன்னு ரிமைப்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் வலியுறுத்தப்பட்டன. (ம-14,20)




அமெரிக்க லொத்தர் இலவச விசா
ஏமாற்றங்களை தவிர்க்க
**உடனே பதியுங்கள்**
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
**V2 Travels**
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
**0768226244**

# ENGLISH CLASSES

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில் புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E O/L Literature
K.Ganesh B.A **077 766 8725**

# பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று பணி புரியக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். (CS 47077) (3/6)

தொடர்பு: **077 336 6626**

# SRISKY Online Fashion

Online Facebook Whatsapp வீடுகளிலிருந்து அனைத்து இந்தியன் பொருட்களையும் ஒன்லைன் வாட்சப் மூலமாக ஓடர் செய்து பெற்றுக் கொள்ள அழையுங்கள்

**SRISKY ONLINE FASHION**
(Indian dress all product Preorder)
+94761144196
SABA Sree lanka Fashion Jewellery
(Hand Stock Page Thirunelvely Branch)
+ 94 775513375 (CS 21215b) (3/6)

# நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள். வீடுகள். கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு.
- வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்.
- சிறிய நீர்கசிவுகள் ஏற்படுமானால் உலகதரமிக்க இரசாயனப் பொருள்களை நீங்களே பெற்று சென்று நிவர்த்தி செய்வதற்கான சகலவித தொழில்நுட்பங்களும் தரப்படும்.
- Syn Roof (சின்றூப்) வெளிப்புற உட்புற சுவர் நீர்க்கசிவை தடுப்பதற்கான இரசாயனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**1 சதுர அடி 150/= இல் இருந்து**

போலி இரசாயனத்துடன் போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம் உத்தரவாதம் தரும்பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

FINEX
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

**North and East Engineering**
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
http://www.northandeastengineering.com




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கொடுக்கிற காலம் நெருங்குவதால் இனி
எடுக்கிற அவசியம் இருக்காது
இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்
பதுக்கிற வேலையும் இருக்காது!
- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை (16.10.2022) சிகரம் : 120

# மேற்கில் ரணிலுக்கு ஆதரவுண்டு; ஆனால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இல்லை

## அவகாசம் கொடுக்கப்பட்டமை வீண்விடயம்



**ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்துக்கு அவகாசம் வழங்கும் வகையில் அமைந்த இந்தத் தீர்மானம் மேற்குலகின் செல்வாக்கைப் பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய ஒன்றாக இருக்குமா என்பதே பலரின் கேள்வி. இது தொடர்பில் தமிழ் மக்களின் மனித உரிமைகள் விடயத்தில் நீண்டகால செயற்பாட்டாளரும் தமிழர் மனித உரிமை மையத்தின் செயலாளருமான ச.வி. கிருபாகரன் 'உதயன் - சஞ்சீவி' க்கு வழங்கிய நேர்காணல் இது.**

### ஜெனிவாத் தீர்மானத்தை அலசுகிறார் தமிழர் மனித உரிமை மையத்தின் செயலாளர் ச.வி.கிருபாகரன்

○ நேர்கண்டவர்: த.பிரஸ்நோவ்

**கே: ஜெனிவாவில் இம்முறை கொண்டுவரப்பட்ட தீர்மானம் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

ப: இந்தத் தீர்மானத்தில் ஒருசில விடயங்கள்தான் முன்னைய தீர்மானங்களிலிருந்து விலகி புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறினால் கடந்த தீர்மானங்களுக்கும் இந்த புதிய தீர்மானத்துக்கும் பெரிதாக எந்த வித்தியாசமும் காணமுடியாது. இதில் கவனிக்கவேண்டிய விடயம் என்னவென்றால் மனித உரிமைகள் பேரவையில் 47 உறுப்புநாடுகள் உள்ளநிலையில், இலங்கையில் ஆட்சி மாற்றம் செய்யப்பட்டு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க செல்வாக்குப் பெற்றுள்ள நிலையில், ஏதோ ஒரு விதத்தில் இலங்கையை, ஐ.நா.வின் மனித உரிமைகள் பேரவையின் பிடியில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதே உண்மை. அதை நிவர்த்தி செய்யக்கூடிய விதத்தில் இப்போது நிலைமைகள் இல்லை. ரணில் ஆட்சியில் இருப்பதால் மேற்கின் அழுத்தம் இல்லை. ஆனால் கோத்தாபய ஆட்சியில் இருந்திருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும். எனினும் ஏதோ ஒரு விதத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவது வரவேற்கப்படவேண்டிய விடயமே.

**கே: புதிய தீர்மானம் இலங்கைக்கு ஒரு அழுத்தமாக இருந்தாலும், தமிழர்களின் எதிர்பார்க்கை தொடர்பிலோ அல்லது பாதிக்கப்பட்ட தரப்பாகவோ திருப்தி அடையமுடியாதல்லவா?**





ப: இந்தத் தீர்மானம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த வகையிலும் திருப்தியைக் கொடுக்க போவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். காரணம், தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினை பிரித்தானியாவிடமிருந்து சுகந்திரம் பெற்றதிலிருந்து தோற்றம்பெற்று, படிப்படியாக மோசமான நிலைக்கு வந்து. இன்று இனஅழிப்பு என்ற நிலையை எட்டியிருக்கிறது. இந்த நிலையில் அதற்கான பரிகாரத்தினைக் காணக்கூடியதாக இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு சிற்சில விடயங்களில் நிவர்த்தி ஏற்பட்டாலும், ஆனால் அவர்கள் நினைத்ததை நிறைவேற்றக்கூடிய வகையில் இந்தத் தீர்மானம் இல்லை. ஐ.. நா உறுப்புநாடுகளிடமோ, மேற்குலகிடமோ நமக்கிருக்கும் செல்வாக்கற்ற நிலமையே இதற்கு மிகப்பெரிய காரணம்.

> பொதுகட்டமைப்பை உருவாக்க நிதியும், ஆளணியும் தேவை

> ஜெனிவாவில் தமிழ் அமைப்புக்களாக இலங்கை அரசின் முகவர்களும் உண்டு

> தமிழ்க் கட்சிகள் பேய்க்காட்டு அரசியலைவிடுத்து உருப்படியான வேலைகளைச் செய்யவேண்டும்

**கே: ஜெனிவாவை இலங்கை அரசு கையாள்வதற்கு ஒரு கட்டமைப்பும், அலுவலர்களும் உண்டு. தமிழர்களுக்கு ஜெனிவா மனித உரிமைகள் பேரவை விடயம் என்பது ஒரு பருவகாலத்துக்கான பேசுபொருளாக மட்டுமே இருக்கின்றது. எனவே ஐ.நா.வையோ மேற்கு நாடுகளையோ நமக்கான தரப்பாகக் கொண்டுவருவதற்கான தமிழர் தரப் பின் போதாமையும் இவ்வாறான நிலைக்கு காரணமெனக் கொள்ளலாமா?**

ப: தமிழர் மனித உரிமைகள் மையம் அதற்கான கட்டமைப்பாகத்தான் இருந்தது. 1990 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு ஐ.நா.வில் மிகச்சிறப்பாக வேலையை அது செய்துகொண்டு வந்தது. தேவை அதிகரித்து வந்தாலும் நிதி மற்றும் மனித வலு தொடர்ந்து இருந்தது.

ஆனால் இனஅழிப்பு நிகழ்ந்த பின்னர் தமிழர் மனித உரிமைகள் மையத்தில் வேலை செய்தவர்கள் பலர் ஒதுங்கிவிட்டனர். 2009 மே மாதத்துக்குப் பின்னர் வேறுபல அமைப்புக்களும் தோன்றின.

2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை அரசே தமிழர் அமைப்பு என்ற போர்வையில் தமக்குச் சாதகமான சில அமைப்புகளை ஐ.நா.வில் புகுத்திவிட்டுள்ளது. இது எமக்கு மிகப் பெரிய இடையூறு. அப்படியான சில அமைப்புகள், தமிழர்களுக்கான உழைப்பதாகக் கூறினாலும் அவர்களின் வேலை தமிழர்களை கண்காணிப்பதாகவே இருக்கின்றது. ஆகவே இனி ஐ.நா.வில் தமிழர்களுக்காக கட்டமைப்பை உருவாக்குவதும், அதற்காக வேலை செய்வதும் கடினம்.


இலங்கையில் மட்டுமல்ல மேற்கிலும் , ஐ.நா.விலும் கூட தமிழர்களைப் பிரித்தாளும் அரசியல் நடைபெறுகின்றது. ஆகவே இனி ஐ.நா.வில் தமிழர்களுக்கான பொதுவான கட்டமைப்பு உருவாக்கப்படுவது கடினமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்





# ஜெனிவாத் தீர்மானமும் தமிழ்நாடும்

○ நிலாந்தன்

மற்றொரு ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீர்மானத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாக்களித்த நாடுகள் மற்றும் நடுநிலை வகித்த நாடுகள் போன்றவற்றைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியும். தீர்மானத்தை ஆதரித்த நாடுகள் தமிழர்களுக்காக அதை ஆதரித்தன என்பதை விடவும் தங்களுடைய பூகோள அரசியல் நோக்கு நிலைகளில் இருந்தே தீர்மானத்தை அணுகியுள்ளன என்பது. இரண்டாவதாகத் தீர்மானத்தை எதிர்த்த நாடுகளை எடுத்துப் பார்த்தால் அவை பெருமளவுக்கு அமெரிக்க எதிர்ப்புக் காரணமாக ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்த்திருக்கின்றன என்பது. எனவே தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நாடுகள் தமிழர்களுக்கு எதிராக வாக்களித்தன என்பதைவிடவும் அமெரிக்காவுக்கு எதிராக வாக்களித்தன என்பதே அதிகம் பொருத்தமான விளக்கம். மூன்றாவதாக நடுநிலை வகித்த நாடுகள். இந்நாடுகள் இலங்கை அரசாங்கத்தோடு தமக்குள்ள உறவை பகை நிலைக்குத் தள்ள விரும்பவில்லை. அல்லது அமெரிக்காவின் மேலாண்மையை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அல்லது தமிழ்மக்களைக் கையாளக்கூடிய தூரத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கருதும் நாடுகள்.

இந்தியா நடுநிலை வகித்திருக்கிறது. கடந்த ஆண்டும் இந்தியா நடுநிலை வகித்தது. இதுவரையிலுமான கடந்த பத்தாண்டுகால ஜெனிவாத் தீர்மானங்களில் இந்தியா இரண்டு தடவைகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறது. இம்முறை ஜெனிவாவில் இந்தியாவை தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தூண்டும் நோக்கத்தோடு தமிழகத்தில் உள்ள சில செயற்பாட்டாளர்கள் முயற்சித்தார்கள். யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு ஓர் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையானது இலங்கை அரசாங்கத்தை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் என்று கேட்டிருந்தது. இந்தியா ஐ.நா.வில் அந்தக்கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தது. இதுபோன்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழகத்தில் உள்ள செயற்பாட்டாளர்கள் சிலர் அங்குள்ள ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்புக்கூடாக இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முயன்றிருக்கிறார்கள்.

ஆனால் தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவாளர்களான கொளத்தூர் மணி போன்றவர்கள்கூட அந்த விடயத்தில் அதிகம் அக்கறை காட்டவில்லை என்று தெரிகிறது. புலம்பெயர்ந்த தமிழர்களோடு அதிகம் உறவைப் பேணும் சீமானின் கட்சியும் அதில் அக்கறை காட்டவில்லை. மேலும் பெரிய திராவிடக் கட்சிகளை அணுகிய பொழுது குறிப்பாக தி.மு.க. அந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. ஈழப் பிரச்சினையில் தலையிட்டு கையைச் சுட்டுக்கொள்ள வேண்டாம் என்று தி.மு.க.வின் தலைமை தன் கட்சி ஆட்களுக்கு அறிவுறுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு ஜெனிவாத் தீர்மானத்தை முன்வைத்து தமிழகத்தில் உள்ள கட்சிகளை ஒருங்கிணைக்க முடியாமல் போனமைக்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது காரணம், தி.மு.க. இந்த விடயத்தில் தலையிடுவதில்லை என்ற முடிவோடு காணப்படுகிறது. நெருக்கடியான காலத்தில் நிவாரணம் வழங்குவதற்கும் அப்பால் ஈழப்பிரச்சினையில் தலையிட தி.மு.க. தயங்குகிறது. அதனால் தி.மு.க. ஆதரவு நிலைப்பாட்டை கொண்ட ஈழ உணர்வாளர்கள் ஜெனிவாவை முன்வைத்துப் போராடத் தயாரில்லை.

இரண்டாவது காரணம், திராவிடம் எதிர் தமிழ் என்ற ஒரு முரண் நிலை ருவிற்றரிலும் கிளப் ஹவுஸ்சிலும் தீவிரமடைந்து வருகிறது. இதில் சீமானின் நாம் தமிழர் கட்சிக்கும் பங்குண்டு. இந்த முரண்பாடுகள் காரணமாக மேற்படி சமூகவலைத்தளங்களில் தி.மு.க. ஆதரவாளர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினரும் மோசமாக மோதிக் கொள்கிறார்கள். இம்மோதல் களில் அநேகமாக அரசியல் நாகரிகம் பின்பற்றப்படுவதில்லை.

மூன்றாவது காரணம், சீமானின் நாம் தமிழர் கட்சி ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஏகபோக உரித்தை கொண்டாட முற்படுகிறது. இதனாலும் ஏனைய கட்சிகள் அந்தப் பக்கம் வரத் தயங்குகின்றன. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள சீமானுக்கு ஆதரவான தரப்புக்களில் அநேகமானவை ஜெனிவாவை, ஜெனிவாத் தீர்மானங்களை பிரயோசனமற்றவை என்று கருதுகின்றன. அவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டு சீமானும் ஜெனிவாவைக் குறித்து அறிக்கை விடாமல் இருந்திருக்கலாம். மேலும், சீமான் தன் அரசியல் எதிரிகளைத் தாக்கும் பொழுது ஈழப் பிரச்சினையை ஒரு கேடயமாகப் பயன்படுத்துகின்றார். அதனால் அவருக்கு விழும் அடிகள் ஈழப் பிரச்சினையின் மீதும் விழுகின்றன.

நாலாவது காரணம், தமிழகத்தில் பாரதிய ஜனதா தன் கால்களை பலமாக ஊன்ற முயற்சிக்கின்றது. ஈழப் பிரச்சினையை அவர்கள் தி.மு.க.வுக்கு எதிராகவும் பயன்படுத்துகிறார்கள். தவிர திராவிடக் கட்சிகளை ஒதுக்கிவிட்டு ஈழப் பிரச்சினையைத் தம் கையில் எடுக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

ஐந்தாவது காரணம், புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளில் சிலவும் தாயகத்தில் உள்ள மிகச் சில தரப்புகளும் இந்துத்துவா ராஜதந்திரம் ஒன்றை கையில் எடுக்க முயற்சிக்கின்றன. அதன்படி தமிழக பாரதிய ஜனதாக்கட்சியின் முக்கியஸ்தர்களான திருமதி. வானதி சீனிவாசன், அண்ணாமலை போன்றோரை அணுகுவதன்மூலம் டெல்லியை நெருங்கலாம் என்று அவர்கள் சிந்திக்கிறார்கள். இதுவும் திராவிடக் கட்சிகளை ஒதுங்கி நிற்க வைக்கிறது.

மேற்கண்ட காரணங்களை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவரும். தமிழகத்தின் கட்சி அரசியலுக்குள் ஈழத் தமிழர்களின் விவகாரம் சிக்கிவிட்டது. இதுதொடர்பாக உரையாடிய ஒரு தமிழகச் செயற்பாட்டாளர் பின்வரும் தொனிப்படச் சொன்னார் "ஈழப்பிரச்சினையை தேர்தலுக்காகப் பயன்படுத்தும் ஒரு வழமைக்குப் பதிலாக தேர்தலை ஈழப் பிரச்சினைக்காக கையாளும் ஒரு வளர்ச்சி தமிழகத்தில் இன்றுவரை ஏற்படவில்லை. நீங்கள் ஈழத் தமிழர்கள் இந்தியாவை கையாள்வதற்குரிய ஒரு வெளியுறவுத் தரிசனத்தையும் கட்டமைப்பையும் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். அதற்கு முதலில் தமிழகத்தை கையாள்வதற்குரிய ஒரு வெளியுறவுக் கொள்கை அவசியம்" என்று.

இவ்வாறான ஒரு அரசியல் சூழலில் மேற்சொன்ன தமிழகச் செயற்பாட்டாளர்களின் தூண்டுதலால் வைகோ ஓர் அறிக்கை விட்டார். பாட்டாளி மக்கள் கட்சியின் அன்புமணி ராமதாஸ் ஓர் அறிக்கை விட்டார். தமிழக சட்டமன்ற உறுப்பினரும், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவருமாகிய வேல்முருகனும் ஓர் அறிக்கையை விட்டார். அவ்வளவுதான் நடந்தது. அதற்குமப்பால் ஜெனிவாத் தீர்மானத்தில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும் என்ற முனைப்போடு தமிழகக் கட்சிகளை நோக்கி உழைத்த செயற்பாட்டாளர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

அதேசமயம் தமிழகத்தில் உள்ள சில செயற்பாட்டாளர்கள் ஈழத் தமிழர்கள் மத்தியில் உள்ள சிவில் சமூகங்களை நெருங்கி ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூகங்களும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதே அது. அதாவது ஜெனிவாத் தீர்மானத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றும் விதத்தில் இலங்கைத்தீவில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் சிவில் சமூகங்களும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கி ஒரு வேண்டுகோளை விடுக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் தமிழ்க் கட்சிகளும் அதற்குத் தயாராக இருக்கவில்லை; சிவில் சமூகங்களும் உடன்படவில்லை. அதற்கு அவர்கள் வலிமையான ஒரு காரணத்தை முன்வைத்தார்கள். அது என்னவெனில், ஏற்கனவே கடந்த ஆண்டு ஆறு கட்சிகள் இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றன. இந்தக்கூட்டுக் கோரிக்கையை தயாரிக்கும்பொழுது தமிழரசுக் கட்சி அதில் முதலில் இணையவில்லை. அக்கட்சி அந்த முயற்சிகளில் இணைந்து செயற்படத் தொடங்கியபின் கோரிக்கையின் வடிவம் மாறியது. எனினும் மேற்படி கூட்டுக்கோரிக்கையானது சாராம்சத்தில் மாகாண சபையை கேட்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்தியது. இதில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கிட்டுப் பூங்காவில் ஒரு பிரகடனமும் வெளியிடப்பட்டது.

இவ்வாறு பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் ஆறு கட்சிகளும் ஒரு கூட்டுக் கோரிக்கையை இந்தியப் பிரதமரை நோக்கி முன்வைத்தன. ஆனால் இன்றுவரை அந்த கோரிக்கைக்கு இந்திய மத்திய அரசாங்கம் பதில் கூறவில்லை. கடந்த ஆண்டு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்திருந்தார். இதன்போது அவர் கூட்டமைப்பை சந்தித்தார். டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தார். ஆனால் ஆறு கட்சிகளையும் ஒன்றாகச் சந்திக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில், மீண்டும் ஒரு தடவை இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைப்பதற்கு தமிழ்க் கட்சிகளும் தயாரில்லை, குடிமக்கள் சமூகங்களும் தயாரில்லை.


ஆக மொத்தம் ஜெனிவாக் கூட்டத்தொடரை முன்னிட்டு இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு ஈழத் தமிழர்கள் மத்தியிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை.

அவ்வாறு ஈழத்தமிழர்களும் தமிழகமும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதால் மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தலாமா இல்லையா என்ற விவாதம் ஒருபுறம் இருக்க, இந்திய மத்திய அரசாங்கத்தை கையாளும் விடயத்தில், தமிழக - ஈழத் தரப்புகள் ஒன்றிணைந்து செயற்படுவதில் உள்ள சிக்கல்களையும் ஏமாற்றகரமான இடைவெளிகளையும் மேற்படி முயற்சிகள் நமக்கு உணர்த்துகின்றன.

தமிழகம் கொந்தளித்தால் இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என்ற ஓர் எடுகோளின் அடிப்படையில் மூத்த அரசறிவியலாளர் திருநாவுக்கரசு உபாயம் ஒன்றை முன்வைத்தார். அது நாலாங்கட்ட ஈழப்போரின்போது 2006 இல் இதே பத்திரிகையில் - உதயனில் - பிரசுரிக்கப்பட்டிருந்தது. 'சென்னையில் திறவுகோல் ' என்ற தலைப்பில் எழுதப்பட்ட அந்தக் கட்டுரையில், சென்னை- டில்லி- வொஷிங்டன் ஆகிய மூன்றும் ஒரு கோட்டில் வரும்போது தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால் கடந்த ஜெனிவாக் கூட்டத்தொடரை முன்னிட்டு சில செயற்பாட்டாளர்கள் தன்னார்வமாக முன்னெடுத்த நகர்வுகள் வெற்றி பெறாதது எதைக் காட்டுகிறது? தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையிலான பிணைப்பு ஒரு பேர பலமாக மாற்றப்படவில்லை என்பதையா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய இரட்டை நிலைப்பாடும் ரஷ்ய-ஈழத்தமிழர் விவகாரமும்

## காஷ்மீர் பிரிக்கப்பட்டமைக்கு எதிராக ஐ.நா. வாக்கெடுப்பு நடத்தியதா?

○ அ.நிக்ஸன்

ரஷ்ய - உக்ரைன் போரில் இதுவரை நாளும் மௌனமாக இருந்த இந்தியா தற்போது வாய்திறப்பது போன்று பாசாங்கு செய்கிறது. உக்ரைனில் கைப்பற்றப்பட்ட நான்கு பிராந்தியங்களில் கடந்த மாதம் வாக்கெடுப்பு நடத்திய ரஷ்யா, அந்தப் பகுதிகளை தனது நாட்டுடன் இணைக்கத் தீர்மானித்திருந்தது. இதன் பின்னரான சூழலிலேயே இந்தியாவுக்குப் பெரும் சோதனை ஏற்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் உக்ரைன் விவகாரம் தொடர்பாக இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற ரஷ்யாவின் கோரிக்கையை இந்தியா நிராகரித்தது. இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், கடந்த ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ரஷ்ய-உக்ரைன் மோதலில் இந்தியாவின் நிலைப்பாட்டை வெளியிட மறுத்துவிட்டார். ஆனாலும் போர் என்ற கருத்தை இந்தியா ஒருபோதும் ஆதரிக்கவில்லை என்றும் ஜெய்சங்கர் வியாக்கியானம் செய்திருந்தார்.

இந்த நிலையில் உக்ரைனில் நான்கு பிராந்தியங்களை ரஷ்யா தன்னோடு இணைத்ததைக் கண்டிக்கும் வரைவுத் தீர்மானத்தின் மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற ரஷ்யாவின் கோரிக்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்துள்ளது. சென்ற திங்கட்கிழமை இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. உக்ரைனில் உள்ள டொனெட்ஸ்க், கெர்சன், லுஹான்ஸ்க் மற்றும் ஜபோரிஜியா ஆகிய பகுதிகளை சட்டவிரோதமாக இணைத்தாகக் குற்றம் சுமத்தி ரஷ்யாவைக் கண்டிக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற ஐ.நா. திட்டமிட்டிருந்தது.

ஐ.நா. பொதுச் சபையில் ரஷ்யா இரகசிய வாக்கெடுப்பைக் கோரியதற்கு இந்தியா உட்பட 107 உறுப்பு நாடுகள் ஒப்புக்கொள்ளவில்லை. ரஷ்யாவின் கோரிக்கைக்கு ஆதரவாக 13 நாடுகள் மட்டுமே வாக்களித்தன. மீதமுள்ள 39 நாடுகள் வாக்களிக்கவில்லை. ரஷ்யாவும் சீனாவும் வாக்களிக்காத நாடுகளில் உள்ளடக்கம். ரஷ்யாவின் இரகசிய வாக்கெடுப்புக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்னர் இந்த முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று ரஷ்யா கோரியது. ஆனால், ரஷ்யாவின் இந்தக் கோரிக்கை மீள்பரிசீலனை செய்யப்படவில்லை.



இங்கு இந்தியா பகிரங்க வாக்களிப்பையே கோரியிருந்தது. இதன் காரணமாக ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில், ஆதரவாக 143 வாக்குகளும் எதிராக 5 வாக்குகளும் பெறப்பட்டன. 35 நாடுகள் வாக்கெடுப்பில் இருந்து விலகிக் கொண்டன. சீனா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளே வாக்களிப்பில் இருந்து விலகிக்கொண்டவை.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

இதேவேளை, ரஷ்யாவின் இரகசிய வாக்கெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த இந்தியா, உக்ரைனின் நான்கு பிராந்தியங்கள் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டமை தவறானது என்ற தீர்மானத்துக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்காமல் விலகியது.

எதிரும் புதிருமான நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் வாக்கெடுப்பில் இருந்து விலகியமைக்கான காரணங்கள் ஒரேமாதிரியானவை அல்ல.

சர்வதேச அங்கீகாரத்துடன் இணைக்கப்பட்டிருந்த இந்தியாவின் ஜம்மு -காஷ்மீர் மாநிலம், 2019 ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்திய மத்திய அரசினால் இரண்டாகப் பிரிக்கப்பட்ட போது, அதற்கு எதிராக பொதுச் சபையில் ஐ.நா. ஏன் வாக்கெடுப்பு நடத்தவில்லை என்ற கேள்வியை பாகிஸ்தான் முன்வைத்தது.

இதன் காரணமாகவே உக்ரைனின் நான்கு பிராந்தியங்களை ரஷ்யா தனது நாட்டுடன் இணைத்தமைக்கு எதிராக ஐ.நா. நடத்திய வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்ற காரணங்களையும் பாகிஸ்தான் முன்வைத்தது.

ஆனால் சிக்கலான வாக்கெடுப்புகளில் நடுநிலை வகிப்பது அல்லது வாக்கெடுப்பில் கலந்துகொள்வதைத் தவிர்ப்பது என்பது இந்தியாவின் நிலைப்பாடு. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரத்திலும் அவ்வான ஒரு நிலைப்பாட்டையே இந்தியா கடைப்பிடித்தும் வருகின்றது.

அயல் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் ரஷ்யச் சார்பு நிலையில் இருந்தாலும், உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு ஆதரவாக வாக்களிக்காமல் தவிர்த்ததன் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இரண்டு நாடுகளும் சேர்ந்து இயங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்த்தமைக்குப் பாகிஸ்தான் சொல்லும் காரணம் இந்தியாவுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமேயில்லை. சீனா, ரஷ்யாவின் நட்பு நாடாக இருந்தாலும், மற்றொரு நாட்டின் இறைமை மீறப்படுகின்றது என்ற பொதுவான சர்வதேசக் குற்றச்சாட்டுளை வெளியில் இருந்து நியாயப்படுத்துவது போன்ற ஒரு தோற்றப்பாட்டைக் காண்பிக்க முற்படு கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை, சீன - இந்திய அரசுகளின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு வாக்கெடுப்பில் இருந்து விலகியது என்பது வெளிப்படை.

இந்த நிலையில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டதால், ஐ.நா.பொதுச் சபையில் உறுப்பு நாடுகள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதாக ஐ.நா.வுக்கான ரஷ்யத் தூதுவர் வாசிலி நெபென்சியா குற்றம் சுமத்தியிருக்கிறார்.

இந்தப் பின்னணியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், ரஷ்யா தொடர்பான அவுஸ்திரேலியச் செய்தியாளர்களின் கேள்விக்கு, இந்தியத் தேசிய நலன்கள் என்ற தொனியில் பதில் வழங்கியிருக்கிறார்.

அதாவது உக்ரைனில் என்ன நடக்கிறது என்பதைக் கருத்திற் கொண்டு, இந்தியா ரஷ்யாவுடனான உறவை மறுபரிசீலனை செய்கிறதா? ரஷ்ய ஆயுத அமைப்புகளை இந்தியா நம்புவதை குறைக்க வேண்டுமென நினைக்கிறீர்களா? என்று செய்தியாளர்கள் கேட்டபோது, ரஷ்யாவுடனான உறவு இந்தியத் தேசிய நலன்கள் சார்ந்தது என்று அவர் விளக்கமளித்திருக்கிறார்.

அத்துடன் பல தசாப்தங்களாக, மேற்கத்தைய நாடுகள் இந்தியாவுக்கு ஆயுதங்களை வழங்கவில்லை. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சர்வதேச சமூகத்தில் அதன் சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டது. ரஷ்யாவுடன் ஒத்துழைப்பைப் பேணும்போது, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளுடனும் நெருக்கமாக இருப்பதுடன், பரந்த சர்வதேச சூழலில் இந்தியா அதிகபட்ச நலன்களை நாடுவதாகவும் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் இந்தியாவுக்கு 'உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு' என்ற பட்டம் உள்ளிட்ட பல பயன்பாடுகளை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் [illegible] அமெரிக்கா இந்தியாவுக்கு பாதுகாப்பு [illegible] வழங்கியுமுள்ளது. இந்தியாவுடன் இராணுவத் தகவல், தளபாடப் பரிமாற்றம், இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நான்கு பாதுகாப்பு ஒப்பந்தங்களில் அமெரிக்கா கையெழுத்திட்டுமுள்ளது. இந்தியாவுடன் முக்கியமான செயற்கைக்கோள் உளவுத்துறையை பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தத்திலும் அமெரிக்கா கையெழுத்திட்டுள்ளது. இந்தோ - பசுபிக் பிராந்தியத்தை மையப்படுத்திய குவாட் இராணுவ அமைப்பிலும் இந்தியாவுக்குத் தலைமைப் பொறுப்பை அமெரிக்கா வழங்கியுள்ளது. ஆயினும் உக்ரைனில் ரஷ்யா மேற்கொள்ளும் நகர்வுகளுக்கு எதிரான அமெரிக்க வியூகத்துக்கு மாறாகவே இந்தியா செயற்படுகின்றது.

குறிப்பாக ரஷ்யாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை இந்தியா கனகச்சிதமாகப் பேணி வருகின்றது. ஆகவே இந்தியாவின் இந்த இரட்டைத் தன்மை பற்றி மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் எவ்வாறு புரிந்து கொள்கின்றன என்பதிலும் கேள்விகள் இல்லாமலில்லை.

ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடை விவகாரத்தில் இந்தியா மாத்திரமல்ல பிரிக்ஸ் நாடுகளும் ஒத்துழைக்க மறுத்திருக்கின்றன. சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கின் அழைப்பில் பிரதமர் நரேந்திர மோடி 2022 ஜூன் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் காணொலி மூலமாக நடைபெற்ற 14 ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் தீர்மானித்திருந்த நிலையில் இந்த மாநாட்டில் நரேந்திரமோடி பங்குபற்றியிருந்தார்.

பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்களில் பிரிக்ஸ் மாநாட்டில் இணக்கமும் ஏற்பட்டிருந்தது. ஆகவே இதன் பின்னணியில் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா கோரிய இரகசிய வாக்கெடுப்புக்கு மாத்திரம் எதிர்ப்புத் தெரிவித்துவிட்டுப் பின்னர் பகிரங்கமாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் வாக்களிக்காமல் தவிர்த்ததன் மூலம் இந்தியாவின் சர்வதேச இரட்டை அணுகுமுறை பட்டவர்த்தனமாகியுள்ளது.

இதேபோன்றே ஈழத்தமிழர் விவகாரத்திலும் இந்தியாவின் இரட்டை அணுகுமுறை குழப்பங்களை உருவாக்கியுள்ளது. இம்முறை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரத்தில் அமெரிக்க =இந்திய அரசுகளிடையே சற்று இடைவெளியும் காணப்பட்டிருந்தது.

தமிழர்கள் கோருகின்ற இன அழிப்பு விசாரணை அல்லது மிகக் குறைந்த பட்சமாக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் இலங்கையைப் பாரப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைக்கு, விரும்பியோ விரும்பாமலோ அமெரிக்க உள்ளிட்ட மேற்குலகமும் ஐரேப்பிய நாடுகளும் ஒப்புக் கொண்டாலும், நிரந்தர அரசியல் தீர்வு என்று வரும்போது இந்தியாவிடம் கேட்க வேண்டும் என்ற தொனியையே இந்த நாடுகள் வெளிப்படுத்துகின்றன.

ஆனால் இந்தியா ஒருபோதும் குறைந்த பட்சத் தகுதியுடைய சர்வதேச விசாரணைக்குக் கூட உடன்படாது என்பதை ஜெனிவாவில் 2012 ஆம் ஆண்டில் இருந்து காண முடிகின்றது. அரசியல் தீர்வு என்றாலும் 13 ஆவது திருத்தச் சட்டத்தையே இந்தியா வலியுறுத்தியும் வருகின்றது. இம்முறை 13 ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் ஜெனிவாத் தீர்மானத்தின் பூச்சிய வரைவில் முன்வைக்கவில்லை. ஏனெனில் இந்தியாவுடன் ஏற்பட்ட சில இடைவெளிகளே அதற்குக் காரணம் என்பது கண்கூடு.

ஆகவே இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அவுஸ்திரேலியாவில் கூறியது போன்று இந்தியத் தேச நலன் என்பதை மையமாகக் கொண்ட சர்வதேச வெளியுறவுக் கொள்கையில் உள்ள இரட்டைத்தன்மை, ரஷ்ய உக்ரைன் போர் விவகாரத்திலும் குறிப்பாக ரஷ்யா குறித்த அணுகுமுறையிலும், ஈழத்தமிழர் மற்றும் இலங்கை விவகாரத்திலும் எவ்வளவு தூரம் சாதகமான விளைவைக் கொடுத்திருக்கின்றது என்பதைப் புதுடில்லி பகிரங்கப்படுத்துமா?

இலங்கை விவகாரத்தில் அதுவும் ஈழத்தமிழர்களின் நிரந்தர அரசியல் தீர்வு விடயத்தில் இந்திய நலன்சார்ந்து செயற்படும் அமெரிக்கா, எதிர்காலத்தில் ரஷ்ய விவகாரத்தில் இரட்டைத் தன்மையுடைய இந்திய வெளியுறவுக்கொள்கையைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளுமா என்பதும் கேள்வியே.

சீனாவும் இந்தியாவுடன் மேற்கொண்டு வரும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகச் செயற்பாடுகளும் இந்திய இரட்டை நிலைப்பாட்டுக்குச் சாதகமாகவேயுள்ளன.

2009 க்குப் பின்னரான இலங்கை விவகாரம் மற்றும் பிரிக்ஸ் நாடுகள் குறித்த அமெரிக்க அணுகுமுறைகளின் தவறுகளும் இந்தியாவின் இரட்டைத்தன்மைக்குச் சாதகமாக உள்ளன என்ற குற்றச்சாட்டுக்களை யாரும் முன்வைத்தால் அதனை மறுக்கவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1505–1948 வரை


# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

சில வாரங்கள் அவர் தேவாலயத்துக்கு வராமலிருந்து விட்டு மீண்டும் வரத்தொடங்கினார்.

நீதிமன்றுக்கு சமூகமளிக்காத குற்றத்துக்காக அவர்களுக்கு நீதிமன்றம் சிறு தொகைப்பணம் தண்டமாக விதித்திருந்தது. இதனால் ஆத்திரமடைந்த முன்னாள் எஜமானர்கள் அவனது வீட்டினுள் நுழைந்து அவனை அழைத்து நெற்றியில் கல்லை வைத்து மூன்று மணித்தியாலங்கள் சூரியனைப் பார்த்தவாறு நிற்கும் படி உத்தரவிட்டனர். இனிமேல் இப்படியான சம்பவங்களில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக நாங்கள் அவர்களை எச்சரித்தோம். அடுத்த அறநெறி வகுப்புக்கு அவன் வந்தான்.

காலையும் மாலையும் அமைதியான முறையில் தேவாலயத்தில் அமர்ந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தான். பாவம் இந்த ஏழை இளைஞனுக்கு இன்னொரு துன்பம் ஏற்பட்டது. அடுத்தநாள் அவர்கள் இவனது கைகால்களைக் கட்டி வீதியோரத்தில் விட்டுச் சென்றுள்ளனர். அவனது காயத்திலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது . துணிகளை வைத்து கட்டிய போதும், இரத்தம் வழிவது நிற்கவில்லை .



எனது சகோதரி உதவிக்குச் சென்றார். சகோதரி அவனை வயல்களூடாகவும் வேலிகளூடாகவும் யாழ்ப்பாண நகருக்கு அழைத்துச்சென்றார். அவர்கள் பயந்து விட்டனர். அவர்கள் தாக்கல் செய்த பொய்யான வழக்கை, நாங்கள் பொய்க் குற்றச்சாட்டு என நிரூபித்தது தான் அவர்களுக்கு ஆத்திரம். அடுத்தநாள் எனது சகோதரி பொலிஸ் இன்ஸ்பெக்டரையும் நீதவானையும் சந்தித்து அவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்கும் படி கோரிக்கை விடுத்தார். அவர்கள் தங்களை மன்னிக்குமாறு கோரினர். அவர்கள் சிறையிலடைக்கப்பட்டால் கிராமத்தில் அமைதியின்மை ஏற்படும் என நாங்கள் அறிந்து கொண்டோம். இதனால் நாங்கள் எமக்கு வழக்குத் தாக்கல் செய்வதற்கும் இதர விடயங்களுக்கும் ஏற்பட்ட செலவுகளுக்காக 100.00 ரூபா கோரினோம். அவர்களும் இனிமேல் தாங்கள் அந்த நகரசுத்திகரிப்புத் தொழிலாளி விடயத்தில் தலையிடமாட்டோம் என உறுதியளித்தனர். இனிமேல் குறைந்த சாதிக்காரர்கள் எதுவித தயக்கமுமின்றி கிறிஸ்தவத்தை தழுவுவார்கள். எல்லாம் அந்த நகரசுத்திகரிப்புத் தொழிலாளியின் துணிச்சலால் விளைந்த பயன் என்று தான் சொல்ல வேண்டும். இந்தச் சம்பவத்திலிருந்து அந்தக் கிராம மக்கள் பல பாடங்களைக் கற்றிருப்பார்கள்.

## உடுவில் , 1886

கடந்த பதினான்கு மாதங்களில், உடுவில் மகளிர் கல்லூரியில் அறுபது பேர் இணைந்துள்ளனர். இவர்களில் முப்பது பேர் கிராமங்களிலிருந்து வந்தவர்கள். ஏனைய முப்பது பேரும் விடுதியில் தங்கிப் படிப்பவர்கள். பிரார்த்தனை நேரத்தில் இந்த இளம்பெண்கள் ஏழை,பணக்காரர் என்ற உயர்வு தாழ்வின்றி அனைவரும் ஒன்றாக எழுந்து நிற்பார்கள். சில பெண்கள் தங்கள் தோளில் குழந்தைகளை வைத்துக் கொண்டு எழுந்து நிற்பார்கள்.

மானிப்பாய்,நவாலி,பண்டத்தரிப்பு பகுதிகளில் 102 புதிய ஏற்பாடு நூல்களை வழங்கினோம். நத்தாரை முன்னிட்டு உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு படங்கள் அடங்கிய (picture books) நூல்கள், புத்தகப்பைகள் என்பவற்றை பரிசாக வழங்கினோம். அவர்கள் அவற்றை மகிழ்ச்சியுடன் மற்றவர்களுக்கு காட்டியதையும் பெருமையுடன் எடுத்துச்சென்றதையும் நாங்கள் அவதானித்தோம். நத்தார்க் கொண்டாட்டத்தில் ஆண்கள், பெண்கள் என எல்லாமாக மூவாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

பெப்ரவரி 15 ஆம் திகதி உடுவில் மகளிர் கல்லூரியில் இருபத்துநான்கு மாணவிகளுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் மிஷனரிகளைச் சேர்ந்தவர்கள்,உள்ளூர் நண்பர்கள், யாழ்ப்பாணத்தின் படித்த ஆண்கள் ,பெண்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். தமிழ்ப் பாடல்கள், கிறிஸ்தவப் பாடல்கள், வழியனுப்பும் பாடல்கள், இசை முழக்கம், சங்கீதக்கதிரை என்பன இடம்பெற்றன.

1816 ஆம் ஆண்டு வணக்கத்துக்குரிய ஹாஸ்டிங் (Hasting) யாழ்ப்பாணம் வந்த போது, 'யாழ்ப்பாணத்திலிருந்த பெண்களில் எழுத வாசிக்கத் தெரிந்த பெண்கள் ஒருவருமில்லை' என்றார். (ஹாஸ்டிங்கின் இந்தக்கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை .சங்க காலத்திலேயே ஔவையார் பல நீதி நூல்களை இயற்றியுள்ளதுடன் கம்பன்,ஒட்டக்கூத்தன் போன்றவர்களுக்கு நிகராக கவி பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. )


இப்போது 5000 பெண்கள் மிஷன் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். இவர்களில் 400 பேர் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர். இவர்களை விட 1000 பெண்கள் தேவாலயங்களில் தொடர்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒழுக்கம், தையல், சமையல், வரவு, இசைக்கருவிகளைக் கையாளுதல், சுத்தம், போன்ற விடயங்களுக்காக பணப்பரிசுகளும் வழங்கப்பட்டன. சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற அரச நிதிப்பரீட்சையில் 84% மாணவிகள் சித்தியடைந்துள்ளனர்.

இதன் மூலம் 2450 ரூபா வருமானம் கிடைத்துள்ளது. பட்டமளிப்பு விழா முடிந்த அடுத்த நாள் எமது மாணவிகளை யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகளுக்கு சுற்றுலா அழைத்துச்சென்றோம். இந்த தீவுகளில் 28,000 பேர் வசிக்கின்றனர்.

(வரலாறு தொடரும்)

# சொற்சிலம்பம் போட்டி

105




அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

...................................................

கையொப்பம்:...........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1.கணவனை தெய்வமாகக் காண்பவளின் பண்பு 5. திறப்பு 7. மேடு 8. சமிக்ஞை 10. கோபம்/சினம் 12. கூற்றுவன் 13. ஈரெட்டு 14. தெரிய/புரிய/உணர 15. திரவியம்/ பொக்கிசம் 17. உற்ற தொடர்பு 18. செய்திக்கு கவர்ச்சி ஏற்படுத்துவது 20. அவதிப்படு/ அந்தரப்படு 21. பதில் 22. முன் அல்ல 23. சிறைப்பறவை வேண்டுவது 24. பலமான தன்மை

### மேலிருந்து கீழ்

1.பத்துப்பாடல் கொண்டது 2. ஏசு 3. கற்றுவந்த தெளிவு 4. திக்கு 6. ஒஸ்ட்ரியாவின் தலைநகரம் 9. சகலதையும் இழந்த நிலைமை 11. பழைய அல்ல 14. வசூலி 16. திரிகடுகத்தில் ஒன்று 17. ஒத்தாசை 18. தடுப்பது 19. ஈனம் 21. ஒன்றின் பெறுமதி

**சொற்சிலம்பம் போட்டி 104 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. மதிப்பு 4.பதவி 6.கறை 07.வசதி 9.கனதி 10.அலை 11. துவரம் 13. நேரு 14. வடம் 15. இரும்பு 17. பதியம் 19. முற்றல் 20.சய 21. நன்று 22. புளுகன்

**மேலிருந்து கீழ்**

1.மகத்துவம் 2. திறை 3.புவனம் 4.பதி 5.வில்லை 8. சதி 9. கரம்பற்று 10. அரும் 12. வட 13. நேரும் 15.இயல்பு 16. புடையன் 18. திற 19. முன் 20.சக

**சொற்சிலம்பம் போட்டி இல.105**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**21.10.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 104 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**திருமதி புவனம் தில்லை**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

**2 ஆம் பரிசு**
**சி.பாலசுந்தரம்**
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்

**3 ஆம் பரிசு**
**எஸ்.சுருதி**
47/15 கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு

**4 ஆம் பரிசு**
**வ.கணபதிப்பிள்ளை**
49/1 பெரேரா வீதி,
வெள்ளவத்தை கொழும்பு

**5 ஆம் பரிசு**
**செ.சந்தனராசா**
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



19

# பிட்டும் யாழ்ப்பாணமும்

கோகுலராகவன்

பாடசாலையில் மருத்துவப் பரிசோதனைக்காக வந்த சுகாதார மருத்துவ அதிகாரி மாணவர்களிடம் கலகலப்பாக உரையாடிக் கொண்டிருந்தார்.
அனைத்து மாணவர்களிடமும் 'காலை என்ன உணவு சாப்பிட்டீர்கள் ? ' என வினவினார்
அனேகமான மாணவர்கள் பிட்டு அல்லது இடியப்பம் சாப்பிட்டதாக கூறினார்கள்.
"ஏன் எங்களிடம் வேறு உணவுத் தெரிவு இல்லாமல் போனது?"
என மருத்துவர் கவலைப்பட்டார்.
எனக்கும் எழுதுவதற்கு ஒரு விடயம் கிடைத்தது. பிட்டு எப்படி, எப்போது தமிழர்களின் முக்கியமான உணவு ஆனது? என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது.
பிட்டு என்றால் "அவித்தல்" என்றவாறு பொருள் கொள்ளப்படுகின்றது அல்லது 'பகுதி பகுதியானது' என்ற கருத்தும் கொள்ளப்படுகின்றது.
பிட்டு கேரளாவில் இருந்து வந்ததாகக் கூறுகின்றனர். கேரளம் என்பது சேரர்கள் ஆண்ட நாடு. சேரன் தமிழன். ஆகவே அதுவும் பழந்தமிழ் நாடு அல்லவா?ஆகவே பிட்டு தமிழர் உணவுதான்.
சங்க இலக்கியங்களில் பிட்டு உணவாக பயன்படுத்தப்பட்மைக்கான நேரடி ஆதாரங்கள் இல்லை. ஆனால் அரிசிச்சோறு உணவாக உட்கொள்ளப்பட்டிருக்கிறது.
எனவே அரிசிமா இருந்திருக்கலாம். அதைவிட, சிறுபாணாற்றுப்படை எனும் சங்க இலக்கிய நூலில் உலக்கை பயன்படுத்தப்பட்டதை "இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த" எனும் பாடல் கூறுகிறது.
சங்ககாலத்தில் உரல் பயன்பாடும் இருந்திருக்கின்றதென்றால், அந்தக்காலத்தில் அரிசியை மாவாக்கி பிட்டு உணவாக்கப்பட்டிருக்கலாம்.
பிட்டுக்கு தேங்காய்ப்பூ சேர்க்கும் வழக்கம் எப்போது தொடங்கியது என்பதும் சங்க காலத்தை அண்டியதாகவும் இருந்திருக்கலாம்.
அரிசிமா, குரக்கன் மா, ஒடியல் மா, கோதுமை மா போன்ற பலவிதமான மா வகைகளில் பிட்டை அவிக்கலாம். அதேபோன்று கீரைப்பிட்டு, சுறாப் பிட்டு, பனங்காய்ப்பிட்டு, சீனிப்பிட்டு, சர்க்கரைப் பிட்டு, ஆலங்காய்ப்பிட்டு என்று பிட்டிலும் பல ரகங்கள் உண்டு.
ஆனால் ஒன்பதாம் நூற்றாண்டில் மாணிக்கவாசக சுவாமிகளின் காலத்தில் வாழ்ந்த செம்மணச்செல்வி பிட்டை கூலியாக கொடுத்து வைகை ஆற்றுக்கு அணை கட்ட கூலியாளை நியமித்ததாக திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அதிலும் உதிர்ந்த பிட்டை கூலியாக கொடுக்கிறாள். குழல் பிட்டிலேதான் உதிர்ந்த பிட்டு வரும்.
ஆகவே ஒன்பதாம் நூற்றாண்டில் குழல் பிட்டு இருந்திருக்கிறது. இதன் பிரகாரம் திருவெம்பாவையில் ஒருநாள் பிட்டு, சிவன் ஆலயங்களில் நைவேத்தியமாக வைக்கப்படுகின்றது.
எனவே தமிழர்களின் பிரதானமான உணவாக நீண்டகாலமாக பிட்டு இருந்தே வந்துள்ளது. சில இலக்கியங்களில் இடியப்பம் 'நூற்புட்டு' என அழைக்கப்படுகின்றது.
ஒரு உணவு வகை, பாரம்பரியமாக உண்ணப்படுகின்றது என்றால் அது பயன்பாட்டுக்கு வந்து நீண்ட காலமாகி இருக்க வேண்டும்.
தமிழ்நாடு, கேரளா, இலங்கையின், வடபகுதி , பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற நாடுகளில் பிட்டு உணவாக உண்ணப்படுகின்றது.
ஔவையாரின் மூதுரை தென்னையை பற்றி குறிப்பிடுகிறது.
"தாளுண்ட நீரை தலையாலே" என்பதே அப்பாடல். இதேபோல பல சங்க இலக்கியங்களில் தென்னைக்கான பதிவு இருக்கிறது.
தென்னை பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து



இருந்து கதைப்பம்

ஈழத்துக்கு வந்து பின்னரே இந்தியாவுக்கும் பரவியதாகக் கூறப்படுகிறது. இதுவும் சங்க காலத்துக்கு முன்னரே நிகழ்ந்ததாக இருக்கலாம்.சோழர்கள் கிழக்காசிய நாடுகளுக்கு படையெடுத்தபோது அந்தநாடுகளில் பிட்டை அறிமுகம் செய்து வைத்தார்கள்.
அங்கு குழல்பிட்டு பிரபல்யமான உணவு வகை. அங்கேயும் பிட்டு என்றே அழைக்கப்படுகின்றது.
பிட்டு இரண்டு வகையாக அவிக்கப்படுகிறது. நீத்துப்பெட்டி பிட்டு மற்றது குழல்பிட்டு. இவற்றை விட இட்லிச் சட்டியில் அவிப்பதும் இருக்கிறது.
இந்த நீத்துப்பெட்டியின் பெயர் வரக்காரணம் என்ன என்று யோசித்தும் விடை கிடைக்கவில்லை. முந்திய காலங்களில் வீட்டு வளையில் திருநீறு இட்டு கட்டும் ஒருவகை பனைஓலைப்பெட்டியின் கீழ்பக்கத்தை கூராக இழைப்பார்கள்.
இது திருநீற்றுப்பெட்டி என அழைக்கப்படும். இதே வடிவில் நீத்துப்பெட்டியும் (நீற்றுப்பெட்டி) இருப்பதால் இதே பெயரில் அழைக்கப்பட்டிருக்கலாம். இன்னுமொரு காரணம் நீராவியில் பிட்டு அவிவதால், மாவை நீர்த்து வேகச் செய்வதால் நீர்த்துப் பெட்டி(நீத்துப்பெட்டி) எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம் .
ஆனால் குழல் பிட்டுதான் பிட்டுக்கு முன்னோடி. பிட்டை தனியாகச் சாப்பிட முடியாது அதற்கு ஒரு துணை வேண்டும்.
ஆனால் பிட்டின் சிறப்பம்சம் எதுவோடும் சாப்பிடலாம். சம்பல்,வாழைப்பழம், சீனி, சர்க்கரை மாம்பழம்,பலாப்பழம், பருப்புக் கறி, மீன்கறி, மீன் பொரியல் இறைச்சிக்கறி, முட்டைப்பொரியல், கத்தரிக்காய் பொரியல் , உருளைக்கிழங்கு கறிபொரியல் என எல்லாவற்றோடும் சாப்பிடலாம். பிட்டின் துணைக்கான தெரிவு நிறைய உண்டு.பிட்டும் முட்டைப்பொரியலும் தனிச் சுவைதான். அநேகரின் தெரிவும் விருப்பத்தெரிவும் அதுதான்.
பிட்டு யாழ்ப்பாணத்தாரின் பிரதான உணவாகிவிட்டது. பிட்டும் யாழ்ப்பாணமும் பிரிக்க முடியாத உறவு.


(இன்னும் கதைப்பம்)



# சிறுவர் கைவண்ணம்




ம.கர்சன்,
தரம்: 6E
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி.




வ.இமாஜன்
தரம் 11
யா/கொக்குவில் இந்துக்
கல்லூரி



எ.அக்ஷயா,
தரம்: 2E
யா/இந்து ஆரம்பப்
பாடசாலை.



எ.அக்ஷயா,
தரம்: 2E
யா/இந்து ஆரம்பப்
பாடசாலை.

## மரமே நீ வரமே....



மரங்களின் சுவாசத்தால் நாம் சுவாசித்தோம்
அதனுயிர் தனைக் கொன்று நூல் வாசித்தோம்
உயிருக்கு உதிரமாகி கல்விக்கு காகிதமாகி
உயிர்விடும் உள்ளம் உந்தன் உள்ளம்

இயற்கைக்கு எழிலாகி மண்ணுக்கு வளமாகி
பசிக்கு உணவாகி நோய்க்கு மருந்தாகி
உதவும் உள்ளம் உந்தன் உள்ளம்
நன்றி கெட்ட உள்ளம் எந்தன் உள்ளம்

வ.இமாஜன்.
தரம்11
யா/கொக்குவில் இந்துக்
கல்லூரி

## உலகு



கோடை கால வெண் மேகத்தை
ரசிக்கிறது இவ் உலகு
மாரி கால கரும் மேகத்தையும்
ரசிக்கிறது இவ் உலகு
அம் மேகம் மோதும் போது
ஏற்படும் மின்னலையும் ரசிக்கிறது இவ்வுலகு
மனம் என மேகம் இருக்க உடைந்து
மழை என அழுகை பொழியும்
போதும் கூட இவ் உலகு ரசிக்கிறதே

லோ.கம்சனா, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆனந்தம்

சஞ்சீவி சிறுகதை

○ எஸ்.ஈசன்

கடவுளென்ற ஒண்டிருந்தால் என்ரபிள்ளைக்கு ஒண்டும் நடக்கக்கூடாது . என்ன சாப்பிட்டானோ? என்னசெய்யிறானோ?" என்று மனதுக்குள் அழுதவாறு சாய்வு நாற்காலியில்கிடந்தாள்பார்வதி ரீச்சர். கிளிநொச்சியில் இரணைமடுக்குளத்தின் நீரேந்துப் பிரதேசம் தான் இராமநாதபுரம். அங்கே வாய்க்கால் வழியே நீர் பாய்ந்து ஓடும் காட்சி தனியழகு. தென்னஞ் சோலைகளாலும் வயல்நிலங்களாலும் குளிர்ச்சி தரும் மருதமரங்களாலும் சூழப்பட்ட குளிர்ச்சியான இராமநாதபுரத்தில் தான் பார்வதி ரீச்சரின் வீடும் அமைந்துள்ளது. வீட்டில் தனிமையில் இருந்த பார்வதி ரீச்சர் விறாந்தையிலிருந்த சாய்வுநாற்காலியில் படுத்துக் கொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனையில் மிதந்தாள். வேறு என்ன, மகனைப் பற்றித்தான் அவளது யோசனைகள்.

பார்வதி ரீச்சர் ஓய்வுபெற்ற தமிழ்ப் பாட ஆசிரியர். தமிழ்மீதுள்ள பற்றே அவரைத் தமிழ் ஆசிரியராக மாற்றியது. பார்வதி ரீச்சரின் கணவர் வேலுச்சாமி வாத்தியார்.

இவர் கண்டி குண்டகசாலையில் கல்வி கற்ற ஒரு விவசாய ஆசிரியர். பார்வதி ரீச்சர் கற்பித்த பள்ளியில் தான் வேலுச்சாமி வாத்தியாருக்கு முதல் நியமனம் கிடைத்தது. பார்வதி ரீச்சரின் தமிழ்ப் பற்றும், துறுதுறு பார்வையும் வேகமாகப் பேசும் இயல்பும் வேலுச்சாமி வாத்தியாருக்கு பிடித்துப்போக, பெற்றோர் சம்மதத்துடன் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

பள்ளியில் படிப்பிப்பதுடன் மாலை நேரங்களில் வயலில் விவசாயம் செய்துவந்த வேலுச்சாமி வாத்தியார், சில காலத்தின் பின் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்று ஒரு விவசாயியாகத் தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டார்.

பார்வதி ரீச்சருக்கும் வேலுச்சாமி வாத்தியாருக்கும் மூன்று பிள்ளைகள். மூத்தவள் பெண் பிள்ளை. அவள் 2006 ஆம் ஆண்டில் இயக்கத்தில் இருந்து வீரச்சாவு அடைந்துவிட்டாள். நடுவிலான் பெடியன். அவன் கம்பசில் படிக்கும் போது ஆமி கைது செய்தது. அதன் பின்னர் அவன் எங்கே என்று இதுவரை எவருக்கும் தெரியாது. பார்வதி ரீச்சர் அவனைத் தேடித்திரியாத இடமில்லை. கடைசி பெண் பிள்ளை. அவள் மருத்துவராகி, இப்போது வெளிநாடு ஒன்றில் செற்றிலாகி விட்டாள். கணவன் வேலுச்சாமி வாத்தியாரையும் இறுதி யுத்தத்தில் இழந்து விட்டார் பார்வதி ரீச்சர்.

2010 ஆம் ஆண்டு பென்சன் எடுத்துவிட்டு இன்று தனி மரமாக இருக்கிறார். தமிழையும் தமிழ் சமூகத்தையும் வளர்க்க வேண்டும் என்ற அவரின் ஆழ்மன எண்ணத்தால், ஓய்வுநேரங்களில் இன்றும் மாணவர்களை வீட்டுக்கு அழைத்து பாடம் சொல்லிக் கொடுக்கின்றார்.

பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்த பார்வதி ரீச்சரிடம் , பக்கத்து வீட்டு மாலதி வந்து " ரீச்சர் 1000 ரூபா காசு தாங்கோ. இவன் மூத்தவன் ஏதோ ரியூசன் காசு கட்ட வேணுமாம். இரண்டு நாளில் தாறேன்" என்று சொல்லிக் கொண்டு பார்வதி ரீச்சர் அருகிலிருந்த கதிரையில் அமர்ந்தாள். படிப்பதற்கென்றால் பார்வதி ரீச்சர் மறு பேச்சின்றி காசைக் கொடுப்பார்.

கல்வியின் முக்கித்துவம் அவளுக்குத் தெரியுமல்லவா.. உடனே அறைக்குள் சென்று , காசை எடுத்து வந்து "இந்தா மாலதி , பெடியனிடம் கொடுத்து விட்டு வா கதைப்பம்" என்றார்.

'ஓம் ரீச்சர் வாறன்' என்று சொல்லிக் கொண்டு சென்றாள் மாலதி.

மீண்டும் பார்வதி ரீச்சருக்குள் பழைய நினைவுகள் ஓடின. "மூன்று பிள்ளைகளும் கணவனும் இருந்த போது இருக்க நேரமில்லாமல் பள்ளிக்கூடம் , வீட்டு வேலையென செய்வேன். இப்போது எனக்கு மட்டும் ஆக்கிப் போட்டுக் கொண்டு இருக்கிறேன்" என்று பெருமூச்சு விட்டார்.

முன்பெல்லாம் பார்வதி ரீச்சர் எந்த நேரமும் எதையாவது செய்து கொண்டிருப்பார் . அல்லது யாருடனும் கதைத்துக் கொண்டிருப்பார்.

ஆனால் இப்போது அப்படியல்ல . கிழமைக்கு ஒரு முறை போன் செய்யும் பிள்ளையுடன் கதைப்பதா? அல்லது தேவை என்றால் மட்டும் வந்து போகும் உறவினருடன் கதைப்பதா?

பார்வதி ரீச்சருக்கு கதைப்பது , கலகலப்பாக இருப்பது பிடிக்கும்.

ஆனால், இப்போதெல்லாம் மகனைப் பற்றி கவலையுடன் எந்நேரமும் அவர் தனிமையில் ஏக்கத்துடனேயே இருக்கின்றார்.

மகனிடம் காசைக் கொடுத்துவிட்டு வந்த மாலதியிடம்,

"மாலதி சும்மா தான் வரச் சொன்னன். வேலை முடிஞ்சுது தானே?" என்றார் பார்வதி ரீச்சர். "ஓம் ரீச்சர். இனி இரவுச்சப்பாடு தான். அதுக்கு ஒருக்கா கடைக்குப் போக வேணும்" என்றவளிடம் மாலதி ரீச்சர் குறுக்கிட்டார்.

"மாலதி நீ கடைக்குப் போறது எண்டத்தான் எனக்கும் ஞாபகம் வருது. நாளையிண்டைக்கு சிங்கப்பூரில் இருந்து பிள்ளை குடும்பம் வருகினம். நானும் சாமன் கொஞ்சம் வாங்க வேணும். உன்ர அவரை நாளைக்கு ஓட்டோவைக் கொண்டு வரச் சொல்லுறியோ?" என்றார்.

''ஓம் ரீச்சர் . நான் அனுப்பிவிடுறன் . எங்கடை பெரிய மாமியின் மகனும், மகளும் வாறனெண்டு வெளிக்கிட்டவை. ஆனால் இஞ்சை நிலைமை சீரில்லை. பொருளெல்லாம் விலை எண்டு நிண்டுட்டினம்"

"ஆர் மாலதி? வடிவும் தமயனுமோ?"

"ஓம் ரீச்சர் " என்றாள் மாலதி.

"இவள் சின்னவள் இரண்டு வருஷமா வரேலை. இப்ப வாறாள் . வந்து அவள் எங்க போறது ? இஞ்சையும் மாமன் மாமி வீட்டையும் தானே. இந்தக்கட்டையும் இண்டைக்கோ நாளைக்கோ எண்டிருக்கு. அதுக்குள்ள என்ர பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சநாள் இருப்பம்" என்றாள் பார்வதி ரீச்சர்.

"ரீச்சர் நாடு எப்படி போச்சுது என்று பாருங்கோவன்?" என்று கதையைத் திருப்பினாள் மாலதி.

"ஓம் மாலதி. செய்தியைக் கேட்டால் என்னவோ எல்லாம் செய்யுது . சின்னப் பெடியள் எல்லாம் இப்ப கெட்ட பழக்கம் எல்லாம் பழகி நாடு கெட்டுப் போச்சு " என்றாள் பார்வதி ரீச்சர்.

"ரீச்சர் இந்த போதைவஸ்களை எல்லாம் எங்கடை சமூகத்தை சீரழிக்கிறதுக்காக அவங்கள் திட்டமிட்டு பரப்புறாங்கள். அதை எங்கடையளும் வாங்கி பாவிச்சுப் போட்டு தலைகால் புரியாமல் நிக்குதுகள்"

"இதுக்கெல்லாம் அவங்கள் இருக்க வேணும். இருக்கிறவன் இருந்தால் எல்லாம் அடங்கும் . சனம் தான் பாவம் மாலதி. பொருளாதாரப் பிரச்சனை ஒருபக்கம், போதைப் பொருள் இன்னொருபக்கம். எப்படி கட்டுப்பாட்டோட இருந்த சமூகம் இப்படியாகிட்டுதே. எங்கடை கலாசாரம் அழிஞ்சு போச்சுது" என்றாள் பார்வதி ரீச்சர்.

கதை நீண்டு சென்றது.

மாலதி நேரத்தைப் பார்த்தாள் .

"ரீச்சர் 5 மணியாகிட்டுது . நான் கடைக்கு போக வேணும். போட்டு வாறன்" என்று எழுந்தவளிடம் ,

"அதுக்குள்ள நேரம் ஐஞ்சாச்சுது. நானும் வீடு கூட்டி விளக்கு வைக்க வேணும்" என்று பார்வதியும் எழுந்தாள். இரவு உணவு தயார் செய்து சாப்பிட்டு விட்டு பாயைப் போட்டுப் படுத்தாள் பார்வதி ரீச்சர். புரண்டு புரண்டு படுத்தும் நித்திரை வரவில்லை. நேரமோ நடுச்சாமத்தை தாண்டியது. மகனின் நினைவுகள் என்றும் இல்லதவாறு அவர் மனதைத் தாக்கின. பார்வதி ரீச்சர் ஏக்கத்துடன் எழுந்து மின்சார விளக்கைப் போட்டு விட்டு, "என்ன வழமையைவிட மனம் இப்படி இருக்கு?" என யோசித்தார். மின்சார விளக்கு கண்ணை உறுத்தியதால், எழுந்து விளக்கை அணைத்துவிட்டு பாயில் உட்காரந்திருந்து கொண்டு கணவனை நினைத்து ''என்ர பிள்ளையை நீங்கள் தான் மீட்டுத் தரணும்" என்று கும்பிட்டு விட்டு மீண்டும் பாயில் கிடந்தாள் பார்வதி ரீச்சர்.

▣ ▣ ▣ ▣

காலை, சேவல் கூவியது .


"அதற்குள் விடிந்து விட்டது" என எண்ணியவாறு பாயைச் சுருட்டி வைத்துவிட்டு காலை வேலைகளை முடித்தார். வழமை போன்று தனது மகனுக்கு இரவு உணவாக வைக்கும் சாப்பாட்டை சூடாக்கி சாப்பிட்டார்.

அன்றைய பொழுது பார்வதி ரீச்சருக்கு கடைக்கு போனதும் வீட்டை சுத்தம் செய்வதுடன் சென்றது.

இரவுபடுத்துக் கொண்டு 'பேரப்பிள்ளைகள் வருவார்கள். அவர்களுக்கு என்ன சாப்பாடு செய்து கொடுக்க வேணும்" என ஒரு லிஸ்ற் மனதில் போட்டுக் கொண்டாள். அதனிடையே "என்ர பிள்ளைக்கு அப்பம் தோசை பிடிக்கும் எல்லோ " மனதை மகன் நினைவு வாட்டியது. அப்படியே நித்திரைக்குப் போனார் ரீச்சர். அதிகாலை இரண்டு மணியிருக்கும் 'ஹை ஏஸ்' வாகனம் ஒன்று வாசலில் வந்து நின்றது. பார்வதி ரீச்சர் சந்தோஷம் தலைக்கேற கதவைத் திறந்து கொண்டு கேற்றுக்கு ஓடினாள் . பேரப்பிள்ளைகளைக் கண்டதும் கட்டி அணைத்து முத்தம் கொடுத்தாள். ரீச்சரின் முகத்தில் அதிக நாள்களின் பின் இப்படி ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

"வந்த களைப்பாயிருக்கும். எல்லாரும் படுங்கோ. விடிய ஆறுதலாக் கதைப்பம்" என்று எல்லோரையும் அவர்களுக்கென ஒதுக்கியிருந்த அறைக்கு அனுப்பிவிட்டு. அதே ஆனந்தத்தோடு நித்திரைக்கு போனார் பார்வதி ரீச்சர்.

ஆனால் காலையில் அவர் எழுந்திருக்கவேயில்லை.




"ரீச்சர் இந்த போதைவஸ்களை எல்லாம் எங்கடை சமூகத்தை சீரழிக்கிற துக்காக அவங்கள் திட்டமிட்டு பரப்புறாங்கள் அதை எங்கடையளும் வாங்கி பாவிச்சுப் போட்டு தலைகால் புரியாமல் நிக்குதுகள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஊரிலும்தான்... 08

சி.கதிர்காமநாதன்





இதனால் மதுரை வரைக்கும் போக வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. அங்கேதான் நல்ல கண்ணாடிகள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். இங்கே மூன்று நாட்கள் கழிந்துவிட்டன.
இன்று மாலை புறப்படலாம் என்று தீர்மானித்தேன். மற்றைய பஸ்ஸில் வேலை முடிந்து ஓய்வாக இருக்கும் வெங்கிட்டுவையும் அழைத்துக் கொண்டு போகலாம். இரவு மதுரைக்குப் போகும் பஸ்ஸில் இரண்டு டிக்கற் புக்கிங் செய்யும்படி வெங்கிட்டுவிடம் சொன்னேன். இரவு வரும்வழியில் கிருஷ்ணவேணி தியேட்டருக்கு அருகில் உள்ள துணை பஸ் ஒப்பிஸில் நின்று ஏறுவதாக வெங்கிட்டுவிடம் சொல்லிட்டு தி.நகர் வந்துவிட்டேன்.
சிதம்பரத்திடம் சொல்லியாக வேண்டும். வீட்டிலே என் பதற்றத்தைக் கண்ட சிதம்பரத்தின் அம்மா என்னவென்று விசாரித்தார். விடயத்தைச் சொன்னேன்.

> அகதியாகப் படகிலை வந்த சனத்துக்கு அகதிக் கார்ட் இருக்கு. பிரச்சினை இல்லை. எனக்கு ஒண்டுமில்லை. நாளைக்கு ஏதேனும் பிரச்சினை நடந்தாத் தூக்கிக் கொண்டு போயிடுவாங்கள்.

"ரொம்பக் கஷ்டமே!" என்று கவலைப்பட்டார். மதுரைக்குப் போகும் விடயத்தைக் கூறிமுடிக்கவும் சிதம்பரம் வந்துவிட்டார்.
"எத்தனை மணிக்குக் கிறம்புறே?"
சிதம்பரத்தின் அம்மா கேட்டார். "இரவு 10 மணிக்கு மேலே தான் பஸ் வரும். இங்கேயே ஏறிவிடலாம். பிரச்சினை இல்லை"
"சரி இரவு 9 மணிக்கு இங்க வாரும். நானும் பாட்டி வீட்ட போய் வந்திடறேன்" சிதம்பரம் சொன்னார்.
"இங்கேயே சாப்பிடலாமே?" சிதம்பரத்தின் அம்மா கேட்டார்.
மறுக்கமுடியுமா?
இரவு கிருஷ்ணவேணி தியேட்டரிலிருந்து படம் முடிந்து சனங்கள் கும்பலாக வெளியே வந்து கொண்டிருந்தார்கள்.
'பாசமலர்' பழைய சிவாஜியின் படம். பழைய படம் என்றாலும் கூட்டத்துக்கு குறைவில்லை.
"முரளி! எப்பவருவீர்?"சிதம்பரம் கேட்டார்.
"வேலை எப்ப முடியுமோ தெரியாது. வேலை முடிஞ்ச உடன் வந்திடுவன்"
"அங்க நிக்கலாம் தானே?"
"இல்லை"
"ஏன்? ஏதாவது பிரச்சினையோ?"
அந்த விடயம் நினைவுக்கு வந்தது. சிதம்பரத்திடம் நான் அதைப் பற்றிக் கதைக்கவில்லை. ஏதாவது சிக்கலில் மாட்டப்பட்டுவிடுவேனோ? இவ்வளவு கவலையீனமாக இருக்கிறேன்.
"என்ன பேச்சைக் காணோம்?"
" உம்மிடம் சொல்ல வேணுமெண்டு நினைச்சன். இப்ப ஞாபகப்படுத்திப் போட்டீர். நான் வரும்போது பாஸ்போட்டில உல்லாசப் பயணம் ஒரு மாதமெண்டு விசா எடுத்து வந்தனான். இப்ப எல்லாம் முடிஞ்சு கனகாலம் போட்டுது. ஏதோ எங்கட ஆக்கள் இருக்கினம் எண்ட தைரியத்திலை இருந்தாலும் பயம் இருக்கத்தான் செய்யுது. அகதியாகப் படகிலை வந்த சனத்துக்கு அகதிக் காட் இருக்கு. பிரச்சினை இல்லை. எனக்கு ஒண்டுமில்லை. நாளைக்கு ஏதேனும் பிரச்சினை நடந்தாத் தூக்கிக் கொண்டு போயிடுவாங்கள். அது தான் லொட்ஜில கனநாளைக்குத் தங்கிறது பிரச்சினை. உடனை வரவேணும்"
கொஞ்சநேரம் அமைதியாகக் கழிந்தது.
"அவ்வளவு பிரச்சினை வராது முரளி. அப்படி வந்திச்சின்னாலும் சொல்ல வேண்டியது "பிரச்சினையில் வந்தேன். இப்பவும் பிரச்சினை தீரவில்லை. அதான் திரும்பிப் போகேல்ல" என்றுதான். இப்படி நிறையப் பேர் இருக்காங்க. ஒண்ணுக்கும் யோசிக்காதேயும்" மனதிலே பயம் சற்றுக் குறைந்தது போலிருந்தது. இருந்தாலும் நடுக்கம் குறையவில்லை. நேரம் ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. இன்னமும் அமளி குறையவில்லை. என்ன ஆரவாரம்! என்ன துள்ளல்! இரண்டாவது காட்சிக்குச் சனங்கள் மொய்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.
சற்றுக் கவலையுடன் மெல்லிதாகச் சிரித்தேன். ஊர் நினைவு வந்துவிட்டது. "இல்ல இந்த நேரத்திலை எங்கட ஊர்ப்பக்கம் எப்பிடி இருக்கும்? நாய்கள் குரைத்துக்கொண்டிருக்கும். சனங்களெல்லாம் அகதியாகப் போன பின்பு நாய்களுக்கு உணவில்லை. விசர்பிடிச்சு அலைஞ்சு கொண்டிருக்கும். கனபேர் நாய்கடிச்சே செத்திருக்கினம். ஒரே இருட்டுத்தான் .வீட்டுக்குள்ள குத்துவிளக்கு, கைவிளக்கு இருக்கும்.
ஏதேனும் சத்தம் கேட்டா அணைச்சுப் போடுவினம். ஆமி ரோந்து போற சத்தமும் கேட்கும். இடையிடையே குண்டுச் சத்தம் கேட்கும். ஜன்னல்கள் அதிர்ந்து போகும்" சிதம்பரம் நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.
"என்ன சிதம்பரம் சரியா அறுக்கிறேனோ?"
"அதெல்லாம் ஒண்ணுமில்லை. இதெல்லாம் கேக்கத்தான் வேணும். நமக்கு எவ்வளவு விஷயம் தெரியாம இருக்கு"
பேச்சுவாக்கில பஸ் வந்ததையும் கவனிக்கவில்லை.
வெங்கிட்டு இறங்கி ஓடிவந்தான். பஸ் சில பயணிகளை ஏற்றிக் கிளம்ப நான் சிதம்பரத்துக்குக் கை அசைத்து விடைபெற்றேன். பின் வெங்கிட்டுவும் நானும் அருகருகே அமர்ந்து கொண்டோம். (தொடரும்)

## கூந்தல் வளர்ச்சிக்கு இயற்கை குறிப்புகள்

முன்னோர்கள் பின்பற்றி வந்த பாரம்பரியமான அழகு குறிப்புக்களை பெரும்பாலும் இப்போது நாம் பின்பற்றுவதில்லை. அவை கூந்தலுக்கும் சருமத்துக்கும் எவ்வித பாதிப்பையும் அளிக்காதவை. கூந்தலை பாதுகாக்க முன்னோர்கள் பின்பற்றி வந்த இயற்கை குறிப்புக்களை தெரிந்துகொள்வோம்.

### வேப்பிலை

வேப்பிலை முடி வளர்ச்சியில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதற்கும் வேர்களை வலுப்படுத்துவதற்கும் பெயர் பெற்ற மூலிகை. வேப்பம் இலைகளை எடுத்து 15 நிமிடங்கள் தண்ணீரில் கொதிக்க வைத்து குளிரவைத்து பின் அந்த வேப்பிலை தண்ணீரை வடிகட்டி முடியை அலசுங்கள். முன்னோர்கள் சீயக்காயில் வேப்பிலை இலையை சேர்ப்பார்கள். இது முடி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான சிறந்த தீர்வாகும்.

### கற்றாழை

கற்றாழையுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து கூந்தலுக்கு பயன்படுத்தினால் கூந்தலை உடையாமல் பாதுகாக்கலாம். கற்றாழையை சீயக்காயோடு கலந்து பயன்படுத்தினால் கூந்தல் நீளமாக வளரும்

### வெந்தயம்

முடி வளர்ச்சிக்கு ஏற்ற பொருள் வெந்தயம். இது தலைமுடியில் கடுமையான மாற்றத்தைக் கொண்டு வரக்கூடியது. 2 -3 தேக்கரண்டி வெந்தயத்தை எடுத்து பேஸ்ட் போல் குழைத்து உச்சந்தலையில் தடவி 20 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து கூந்தலை அலசுங்கள். முடி உதிர்தல். முடி மீண்டும் வளர்வது, முடியின் ஒட்டுமொத்த நிலையை மேம்படுத்துவதற்கும் சிறந்த தீர்வாகும்.

### நெல்லிக்காய்

நெல்லிக்காய் இளநரைப் பிரச்சினையைத் தடுக்கின்றது. நெல்லிக்காயை கொட்டை நீக்கி உலர வைத்து 6 டீஸ்பூன் எடுத்து தண்ணீருடன் கலந்து தலைமுடி நுனி வரை தடவி 30 நிமிடங்கள் வரை ஊற வைத்து கூந்தலை அலசுங்கள். இது தலைமுடி வளர்ச்சியை துரிதப்படுத்தும்.



## இறால் கட்லட்





| | |
|---|---|
| பெரிய இறால் - | 500 கிராம் |
| முட்டை - | 2 |
| உருளைக்கிழங்கு - | 250 கிராம் |
| பெரிய வெங்காயம் - | 1 |
| மிளகாய்த்தூள் - | 1 தேக்கரண்டி |
| ரஸ்க்தூள் - | தேவையான அளவு |
| இஞ்சி | 2 அங்குலம் |
| பூண்டு - | 6 பல் |
| வினிகர்- | 1 மேசைக்கரண்டி |
| உப்பு - | தேவையான அளவு |
| எண்ணெய் - | 500 மில்லிலீற்றர் |

இறாலை மிகவும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். முட்டையுடன் உப்புத்தூள் சேர்த்து அடித்து வைத்துக் கொள்ளவும்.
உருளைக்கிழங்கை வேக வைத்து, தோல் நீக்கியபின் உப்புத்தூள் சேர்த்து மசித்துக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும்.
வாணலியில் 1 மேசைக்கரண்டி எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் அரைத்த இஞ்சி, பூண்டு ஆகியவற்றைப் போட்டு வதக்கி ஆறவிடவும்.
நறுக்கிய இறாலுடன், மசித்து வைத்துள்ள உருளைக்கிழங்கு, வெங்காயம், இஞ்சி, பூண்டு வதக்கியது, மிளகாய்த்தூள், வினிகர் இவற்றை கலந்துகொள்ளவும். உப்பு சேர்த்துக் கொள்ளுங்கள். இறால் கலவையை கட்லட் வடிவங்களாக செய்து வைத்துக் கொள்ளவும்.
வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கட்லெட்டை முட்டையில் நனைத்து, ரஸ்க்தூளில் புரட்டியபின் எண்ணெய்யில் போட்டு பொரித்து எடுத்து பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மேற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**கே: ஜெனிவாவைக் கையாளுவதற்கு எப்படிப்பட்ட ஒரு பொதுக்கட்டமைப்பு இருந்தால் ஆரோக்கியமென எண்ணுகிறீர்கள்?**

ப: எந்தவொரு கட்டமைப்பும் உருவாக்கப்பட வேண்டுமாக இருந்தால் முதலில் அதற்குப் போதுமான நிதி இருக்கவேண்டும். நிதிவளம் இல்லாமல் கட்டமைப்பை உருவாக்க முடியாது. அடுத்தது அதற்குரிய மனித வளம் வேண்டும். குறிப்பாக மொழி ஆளுமை, அரசியல் நிபுணர்கள், இராஜதந்திர அனுபவமுள்ளவர்கள் என்போரைக் கொண்டதாகவே கட்டமைப்பொன்று உருவாக்கப்படவேண்டும். அப்போதுதான் ஐ.நா.வில் சரியான வியூகங்களை நாம் வகுக்கமுடியும்.

> ரணில் விக்கிரமசிங்க ஒரு நரி என்பது எல்லோருக்குமே தெரியும். ரணில் விக்கிரமசிங்க மேற்கு நாடுகளின் செல்வாக்கினைக் கொண்டவர். அத்தோடு ஏற்கனவே ஜெனிவாத் தீர்மானத்தை ஏற்க மாட்டோம் என ரணில் அரசாங்கம் அறிவித்தும் விட்டது.

தமிழர் மனித உரிமை மையம் அப்படியான ஒரு கட்டமைப்பாகத்தான் 1990 ஆம் ஆண்டளவிலிருந்து இயங்கி வந்தது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதனுடைய கதைவேறு. தற்போது ஐ.நா.விடயம் தொடர்பில் இந்த அமைப்புகளிடையே ஒரு போட்டிதான் நிலவுகின்றது.

'என்னால்தான் அறிக்கை வந்தது. எம்மால் தான் இந்தியா இப்படி சொன்னது. ஆணையாளரின் அறிக்கையை எங்களுடைய நடவடிக்கைகளே தீர்மானித்தன' என்று தமக்குள் போட்டி போடுகின்ற, வெட்கப்படக்கூடிய காரியங்களே நடக்கின்றன. இந்தநிலை மாறவேண்டும்.

**கே: தமிழ் அரசியல்வாதிகள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் அறிக்கைகள், கடிதங்கள், ஊடக அறிக்கைகள் என்பவற்றையே ஜெனிவாவுக்கு அதிகளவில் தனித்தனிக் கட்சிகளாகவும், நபர்களாகவும் அனுப்பி வைக்கின்றனர். அதுமட்டும் போதுமா? அல்லது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுடன் வேறுவகையான நகர்வுகளைப் பேணவேண்டுமா?**

ப: தமிழ்க் கட்சிகள் அதிகரிப்பது தமிழர்களுக்கு பலவீனம். பொதுவான அடிப்படையில் ஒரு சரியான கட்சி உருவாகவேண்டும். முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி இருந்தது. பின்னர் கூட்டமைப்பு இருந்தது. ஆனால் கூட்டமைப்பு உடைக்கப்பட்டது. 2010 இல் ஆரம்பமான உந்த உடைவுகளால் இன்று கூட்டமைப்பு சிதைந்தேவிட்டது. இவர்கள் தங்களுக்கு ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தாமல், வெளிநாட்டில் வந்து வேலை செய்வது கடினம். என்னுடைய பார்வையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ் அரசியல்வாதிகள் வருகின்றார்கள், போகின்றார்கள், சிலர் நிற்கின்றார்கள். இதைவிடவும் வேறு அரசியல்வாதிகளும் வந்திருக்கின்றார்கள். இவர்கள் யாவரும் நவக்கிரகம்போல் வந்து போவதால் எதுவும் ஆக்கபூர்வமாக நடைபெறாது. இவர்கள் அனைவரும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று உறுப்புநாடுகளிடம் கதைக்கும்போது பலம் இருக்கும். வருடத்துக்கு ஒருமுறைவரும் நல்லூர்த் திருவிழாபோல இங்கு வந்து வேலை செய்ய முடியாது. மனித உரிமைகள் பேரவையில் மனித உரிமை வேலை என்பது தொடர்ச்சியானது. தினசரி, வாரம், மாதம், வருடம் என அது இடையூறின்றித் தொடரவேண்டும். அரசியல்வாதிகள் தேர்தலை இலக்காகக் கொண்டு , மனித உரிமைப் பேரவை சூடு பிடிக்கும் போது இங்கு வருகின்றார்கள். அப்படி வந்தால் தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று நினைக்கின்றார்கள். ஆகவே இந்தத் தமிழ்க் கட்சிகள் பேய்க்காட்டு அரசியலை நிறுத்தி, உருப்படியான வேலைகளைச் செய்யும் போது உறுப்புநாடுகளிடம் நமக்கு செல்வாக்கு வரும்.

**கே: ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில், ஜெனிவா தொடர்பில் அவருடைய அடுத்த கட்ட செயற்பாடுகள் எப்படியானவையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?**

ப: ரணில் விக்கிரமசிங்க ஒரு நரி என்பது எல்லோருக்குமே தெரியும். ரணில் விக்கிரமசிங்க மேற்கு நாடுகளின் செல்வாக்கினைக் கொண்டவர். அத்தோடு ஏற்கனவே ஜெனிவாத் தீர்மானத்தை ஏற்கமாட்டோம் என ரணில் அரசாங்கம் அறிவித்தும் விட்டது. அவர்களுக்கு அவகாசம் கொடுப்பது வீண் வேலை. இந்த அவகாசத்தில் ரணில் தன்னை பலப்படுத்தவே பார்ப்பார். தெற்கில் இருக்கும் மக்களின் ஆதரவு அவருக்குத் தேவை. மொட்டுக் கட்சியின் ஆதரவும் தேவை. ஆகவே, தமிழர்கள் மீதான எதிர் அரசியலையே அவர் மிக இராஜதந்திரமாக நகர்த்துவார். தமிழருக்கு எதையும் ரணில் செய்யப்போவது இல்லை. இந்தத் தீர்மானம் வருவதன் மூலம் எதுவும் நடைபெறப்போவதும் இல்லை. இதனை ஐ.நா.வில் இருக்கும் உறுப்புநாடுகள் உட்பட சகலருக்கும் நாம் விளங்கப்படுத்தியிருக்கின்றோம். ரணிலின் வருகை தமிழர்களுக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. ரணிலின் ஆட்சி தொடர்ந்தால் இராணுவமயமாக்கல், சிங்கள - பௌத்த மயமாக்கல் என்பன கூடிக்கொண்டுதான் போகும். ராஜபக்ச - கோத்தாபய காலத்தில் இவற்றை வெளிப்படையாகச் செய்தார்கள். ஆனால் அதனை நாசூக்காக ரணிலின் காலத்தில் செய்வார்கள்.

# பாவம் கோத்தா



ந.பரமேஸ்வரன்

யானை சேற்றில் விழுந்தால் காகமும் கொத்தும் என்றொரு பழமொழி உண்டு. இந்த நிலை தான் சிங்களவர்களின் முடிசூடா மன்னன் என்று வர்ணிக்கப்பட்ட கோத்தாபய ராஜபக்சவுக்கும் ஏற்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகாசங்கத்தினர் உட்பட பௌத்த தேரர்கள், சட்டத்தரணிகள் சங்கம், சிங்கள புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், புலம்பெயர் சிங்களவர்கள் என சிங்கள சமூகத்தின் ஒட்டுமொத்த ஆதரவுடன் ஶ்ரீலங்காவின் வரலாற்றில் முதல் தடவையாக சிறுபான்மை மக்களின் ஆதரவின்றி 69% சிங்கள வாக்குகளுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு அரியணை ஏறியவர் கோத்தபாய ராஜபக்ச . அவர் அரியணை ஏறி சரியாக இரண்டு வருடங்கள் கழிய முன்னரே அவரை அரியணையில் ஏற்றியவர்களால் ஓட ஓட விரட்டப்பட்டு, போவதற்கு இடமில்லாத நிலையில் மீண்டும் தனது சொந்த நாட்டுக்கே வந்து , தன்னை நவரத்தின சிம்மாசனத்தில் அமர்த்தியவர்களிடமிருந்து தனது உயிரைப் பாதுகாக்குமாறு கெஞ்சிக்கொண்டிருக்கிறார்.

தன்னை நவரத்தின சிம்மாசனத்தில் அமர்த்திய தனது மக்களே நாட்டைவிட்டுத் துரத்தும் அளவுக்கு அப்படி என்ன தான் செய்து விட்டார் கோத்தா?

வேடிக்கை என்னவென்றால் கோத்தா பதவியிலிருக்கும் வரை 'பூம் பூம்' மாடு மாதிரி அவரது செயற்பாடுகள் அனைத்துக்கும் கண்ணை மூடிக்கொண்டு தலையாட்டி வந்த பொதுஜன பெரமுன அமைச்சர்கள் மற்றும் கருணா போன்றோர் கூட இப்போது கோத்தாவின் மீது குற்றம் சுமத்துவது தான். இறக்குமதிக்குத் தடை விதித்தார், இரசாயன உரத்துக்கு தடை விதித்தார், இரசாயனக் கிருமிநாசினிகளுக்கு தடை விதித்தார். இவை தான் கோத்தாவின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள்.

இறக்குமதித் தடை, இரசாயன உரத் தடை, இரசாயன கிருமிநாசினிகளுக்குத் தடை இந்த மூன்று தடைகளும் தான் தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என அரசியல்வாதிகள், பொருளியலாளர்கள், ஊடகவியலாளர்கள் அனைவரும் கோத்தா மீது குற்றம் சுமத்துகின்றனர். இவ்வாறு கோத்தா மீது குற்றம் சுமத்துபவர்கள் , கோத்தா எதற்காக இந்தத் தடைகளை கொண்டு வந்தார் என்று சற்று சிந்தித்திருப்பார்களானால் கோத்தாவின் செயற்பாடுகளுக்கு நிச்சயம் ஆதரவு வழங்கியிருக்க வேண்டும்.

1970 ஆம் ஆண்டு இடதுசாரிகளுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றிய சிறிமாவோ தலைமையிலான அரசாங்கமும் இறக்குமதிக்குத் தடை விதித்தது. இதனால் உள்ளூர் உற்பத்தி அதிகரித்தது. நாடு சுபீட்சப்பாதையில் செல்லத்தொடங்கியது. முன்னைய அரசாங்கங்கள் பெற்ற கடன்களை அடைக்கும் நிலைக்கு நாடு முன்னேறியது.

யாழ்ப்பாணத்திலும் கண்ணாடித் தொழிற்சாலைகள், சவர்க்காரத் தொழிற்சாலைகள், ரயர்த் தொழிற்சாலை, ஆணித் தொழிற்சாலை என்பன உருவாகின. இறால், பாசி பதனிடும் தொழிற்சாலைகள் தகரத்திலடைக்கப்பட்ட இறாலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன . இதன்மூலம் பல உள்ளூர் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிட்டியதுடன் அந்நியச் செலாவணியும் கிடைத்தது. நாவற்குழியில் இருந்த அன்ட்றீஸ் இறால் பதனிடும் தொழிற்சாலையில் 450-500 வரையான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிட்டியது. யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயமும் மிளகாயும் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. உயர் பதவிகளை வகித்த அரச அதிகாரிகள் கூட வீடுகளில் மரவள்ளிச் செய்கையில் ஈடுபட்டனர். அதுவரை காலமும் மண் வீடுகளில் வாழ்ந்து வந்த யாழ்ப்பாண விவசாயிகள் கல் வீடுகளைக் கட்டத் தொடங்கினர். இந்தக்காலப்பகுதியில் கட்டப்பட்ட வீடுகள் சில சேதமடைந்த நிலையில் வலி.வடக்கில் இப்போதும் காணப்படுகின்றன.

இதே காலப்பகுதியில் தமிழ்த் திரைப்படங்களின் இறக்குமதியும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் அப்போதும் தமிழகத்துக்குச் சென்று எம்.ஜி.ஆரின் படங்களைப் பார்த்துவிட்டு வந்தவர்களும் இன்றளவும் இருக்கத்தான் செய்கிறார்கள். தென்னிந்தியத் திரைப்படங்களுக்கான தடை காரணமாக நான் உங்கள் தோழன், புதிய காற்று, பொன்மணி, தெய்வம் தந்த வீடு போன்ற திரைப்படங்கள் இலங்கையில் தயாரிக்கப்பட்டன. இவற்றில் நான் உங்கள் தோழன், புதிய காற்று இரண்டும் மனோ கணேசனின் தந்தை வி.பி கணேசனால் தயாரிக்கப்பட்ட வெற்றிப்படங்கள். இதேபோல் தமிழக சஞ்சிகைகள், நாவல்களுக்கும் தடைவிதிக்கப்பட்டன. இதன் காரணமாக மாணிக்கம், சுடர், சித்ரா போன்ற சஞ்சிகைகள் வெளிவந்ததுடன் வீரகேசரியும் மாத நாவல் ஒன்றையும் மித்திரன் வெளியீடாக சில நாவல்களையும் பிரசுரித்தது. இதனால் உள்ளூர் எழுத்தாளர்களுக்கு களம் கிட்டியது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அரசாங்கமோ, தனியார் துறையினரோ கோத்தாவின் ஆட்சியில் எந்தவித உற்பத்தி முயற்சிகளிலும் ஈடுபடவில்லை என்பது வருத்தத்துக்குரியது.

முன்னணி தனியார் தொலைக்காட்சி ஒன்று, தினமும் நாடு முழுவதிலுமுள்ள மூவின விவசாயிகளையும் செவ்வி கண்டு "இரசாயன உரமும் கிருமிநாசினியும் இல்லாத காரணத்தால் எதிர்பார்த்த விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியவில்லை விவசாயிகள் பட்டினியை எதிர்நோக்குகின்றனர் " என ஒப்பாரி வைத்தது.

இந்த இரசாயன கிருமிநாசினிகளாலும், உரங்களாலும் ஏற்படும் பாதிப்புகளைப்பற்றி எவருமே சிந்தித்ததாகத் தெரியவில்லை. தற்போது இலங்கையில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் சிறுநீரக நோயாளிகளும் 35 ஆயிரம் புற்றுநோயாளர்களும் உள்ளனர் என்று உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. வருடந்தோறும் 5000 பேர் புற்றுநோயால் இறக்கின்றனர் என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. சிறுநீரகம் தேவை என்ற விளம்பரத்தை இப்போது அடிக்கடி காணமுடிகின்றது. சிறுநீரக நோயாளிகளினதும், புற்றுநோயாளர்களினதும் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணம் என்ன என்ற ஆராய்ச்சியில் யாராவது ஈடுபட்டார்களா? பொலநறுவையிலும், மகரகமவிலும் உள்ள புற்றுநோயாளர்கள் பற்றியும் சிறுநீரக நோயாளர்கள் பற்றியும் ஒளிபரப்ப இலங்கையின் முன்னணி தொலைக்காட்சி முன்வருமா?

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கும் நோக்குடன் தற்போது கிளைபோசேட் எனப்படும் கிருமிநாசினி இறக்குமதிக்கு ஜனாதிபதி ரணில் அனுமதி வழங்கியுள்ளார். கிளைபோசேட்டை சுவாசிப்பதால் தோல், தொண்டை, மூக்கு என்பவற்றில் பாதிப்பு ஏற்படுவதுடன் எலும்புகளிலும் தாக்கம் ஏற்படும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கொழும்பு தமிழ் தினசரி ஒன்று 'மலையக மக்கள் இரசாயன உரத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்' என முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. அதே பத்திரிகையில் உட்புறத்தில் 'மலையகத்தில் சிறுநீரக பாதிப்பு அதிகமாகி வருகிறது நுவரெலியா அல்லது கிளங்கனில் சிறுநீரக கிளினிக் ஆரம்பிக்கப்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் ' என கட்டுரை ஒன்று பிரசுரமாகியுள்ளது. கிளைபோசேட் தேயிலை தோட்டங்களிலேயே அதிகம் பாவிக்கப்படுகின்றது . இந்தியாவில் பசுமை விவசாயம் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, சிக்கிம் மாநிலம் உலக அளவில் இயற்கை உணவுகளுக்கு பெயர் பெற்று விளங்குகிறது. இயற்கை உணவை சுவைப்பதற்காக உல்லாசப்பயணிகள் சிக்கிம் மாநிலத்துக்குப் படையெடுக்கின்றனர். இதனால் அந்நியச்செலாவணியும் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் நம்மாழ்வாரின் பசுமை விவசாயம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவற்றைப்பற்றி அரசியல்வாதிகளோ, விவசாயத் திணைக்களமோ, ஊடக நிறுவனங்களோ சிந்தித்ததாகத் தெரியவில்லை.

பாவம் கோத்தா , 1977 இல் சிறிமாவுக்கு ஏற்பட்டது போன்ற ஒரு நிலை தான் (எதிர்க்கட்சியாக கூட வர முடியாத நிலை அப்போது சிறிமாவுக்கு ஏற்பட்டது) இப்போது கோத்தாவுக்கு ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடிய ஒரேயொரு விடயம் , இலங்கை மக்களிடம் எதிர்காலம் பற்றிய சிந்தனை எள்ளளவும் இல்லையென்பது தான். புற்றுநோய் மருத்துவமனைகளையும் சிறுநீரக மருத்துவமனைகளையும் புதிது புதிதாக ஆரம்பிப்பதை விடுத்து நோயணுகா செயற்பாடுகளை முன்னெடுக்க எந்தவொரு அரசியல்வாதி யாவது முன்வருவாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org